




# வெளியே வந்தும் விரக்தியின் சிறைக்குள்..

டிசம் 2011 December 04 - December 10, 2011 பக்கங்கள் -28 25.00

REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA

சுடர் ஒளி
THE SUDAROLI
வாரமலர்


## ஏன் இந்த கொலைவெறி




# வடக்கைக் கருவறுக்கும் வரப்பிரசாதங்கள்!


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உலகின் முதலாவது மணல்விடுதி (Sand Hotel) இது. இங்கிலாந்திலுள்ள வேமவுத் கடற்கரையில் இவ் விடுதி அமைக்கப்பட்டுள்ளது.












# சொகுசு பஸ்கள் பார்த்ததுண்டா?

நாங்கள் உள்ளூரில் பலவகையான பஸ்களை பார்த்திருப்போம், சில பஸ்களில் பயணம் செய்யவே விருப்பமில்லாமல் இருக்கும். காரணம் அவற்றின் நிலமை தான். ஆனால் இங்கே பாருங்கள் கீழே காணப்படும் சொகுசு பஸ்களை பார்த்தாலே பயணம் செய்ய வேண்டும் போல் தோன்றுகின்றதல்லவா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏன் இந்த கொலை வெறி

why this kolavery kolavery di......
why this kolavery kolavery di....'

ஒட்டு மொத்த தமிழ் இளசுகளின் மனங்களும் முணுக்கும் இசை 'வை திஸ் கொல வெறிடி.' அப்படி என்னதான் சுகம் இருக்கிறது இந்த ஒழுங்ககவிழ்க்கப்பட்ட இசையில்?. ஏன் இதை இப்படிச் சுவைக்கின்றார்கள்? பாடல் வெளியாகி நான்கு தினங்களில் மட்டும் பதினெட்டு லட்சம் பேர் இப்பாடலை இணையத்தளங்களில் கேட்டிருக்கிறார்கள்.

வெளியியே சொல்ல கேவலமாய் இருந்தாலும் இந்த எழுத்துச் சிதறலின் உண்மைத்தனத்தை நிரூபிக்க ஒன்றைச் சொல்லியே ஆக வேண்டும். கடந்த ஒரு வாரமாக எனது காதுகளும் இந்தப் பாடலை அணைத்தபடி தான் இருந்தன. தொடக்கத்திலிருந்து முடியும் வரைக்கும் பிய்த்துப் பிய்த்துக் கேட்டேன். தொடர்ச்சியாக இரண்டு மணிநேரம் திருப்பித் திருப்பிக் கேட்டும் அலுக்கவில்லை. இந்தப் பாடலில் பெரும்பாலான மனங்களுக்குப் பிடிக்கும் சோகம் இருக்கவில்லை. இசைக் கோர்வையில் நேர்த்தியிருக்கவில்லை. பாட்டு தொடக்கத்திலிருந்து முடியும் வரைக்கும் இசையின் அல்ங்கோலத்தையே அவிழ்த்து விட்டது. பாதிப் பேருக்கு பாடகர் என்ன பாடுகின்றார் என்றே புரியவில்லை. தங்கிலீஸ் (தமிழ் நாட்டு தமிழும் ஆங்கிலமும்) பாடல் முழுவதையும் அப்பியிருக்கின்றது. தட்டுத் தடுமாறி இடையிடையே வரும் தமிழ் சொற்களைக் கூட பாடகர் 'only english' வார்த்தைகளால் கட்டுப்படுத்தி விடுகின்றார். ஆனாலும் பாட்டு செமஹிட்.

ஏன் இந்த அலைவரிசையற்ற இசை இளசுகளைப் பிடித்தது? இதற்கு மிகச் சாதாரணமான ஒரு பதிலையே சொல்லலாம்.

எப்போதும் யதார்த்த இசைக்கும், பாடலுக்கும் இருக்கின்ற வைரத்தை இந்தப் பாடல் திரைக்கு கொண்டு வந்திருக்கின்றபடியால் இளசுகளைக் கவர்ந்து விட்டது. இதற்கு முதலும் இப்படியான பாடல்கள் வந்திருக்கின்றன. சக்கை போடு போட்டிருக்கின்றன. குறிப்பிட்டுச் சொல்வதானால் இந்தத் தலைமுறைப் பாடகர் சிம்புவின் பாடல்கள் அப்படியான அலங்கோல ரசணையின் உச்சத்தை தொட்டவைகள். பெண்களை வைத்து எவ்வளவு கேவலமாக பாட முடியுமோ அவ்வளவு கேவலமாக பாடி அசத்திய விரல் வீரனின் பாடல்களைக் கடந்து விட்டது 'வை திஸ் கொல வெறிடி...'

சகல விதமான ஊடகங்களின் கொடைகளாலும் வசப்பட்டுக் கிடக்கும் இன்றைய இளசுகளின் ரசனைத் துடிப்பை தனுஸ் பிடித்துப் பார்த்துப் பாடல் எழுதியது தான் பாடலைக் கொண்டாட காரணம். தன் வயதோடு கலந்த உணர்வு இசையாக பாடல் ரசனைக்குரிதாகியது. இதையெல்லாம் விட இன்னொன்றும் இந்த ரசனையின் பின்னணியில் மறைந்து கிடக்கின்றது. இந்தக் காலத்துப் பையன்களுக்கும், பொண்ணுங்களுக்கும் ஒழுங்கவிழ்ப்புக்களும், ஒழுக்க அவிழ்ப்புக்களும் என்றாலே ரொம்ப பிடித்த விடயங்கள் தானே. வெளித் தெருவுக்கு போவதென்றாலே உள்ளாடைகளை விளம்பரப்படுத்திக் கொள்ளலாம் என்றே பல இளசுகள் நினைக்கின்றனர். அதுவே நாகரிகமும், நாகரிகத் தேவையாகவும் இருக்கின்றது. எனவே இந்த இரண்டு அவிழ்ப்புக்குள் ஏதாவது ஒன்றை பாடல் அவிழ்த்துப் போட்டதால் ஹிட் கொடுத்திருக்கின்றது.

ஒருவரின் ரசனையை வைத்துக் கொண்டே அவரின் முழுப்பெறுமானத்தையும் அளவிட்டுக் கொள்ளலாம். அவரின் எதிர்கால இருப்பை, அப்படியான மனிதர்கள் இணைந்து உருவாக்கப் போகும் சமூகத்தை முன்கூட்டியே தெரிந்து கொள்ளலாம்.

இந்தப் பாடல் ஏற்கனவே குறிப்பிட்டது போல இசையின் அலங்கோலம் தான். அலங்கோலம் வெற்றிபெற்றிருக்கின்றது. எனவே அலங்கோலமான ரசிப்பு உலகம் தான் இன்று பரந்து கிடக்கின்றது. நம் மத்தியிலும் மிகத் தீவிரமாக பரவி வருகின்றது. எனவே எதிர்காலம் இந்த ரசனைகளின் தாக்கத்தினால் கருவாகி உதயமாக இருக்கின்றது. காட்டுத்தனமான கலாசார விழுமியங்களும், ஒழுக்கங்களும் ஒழுங்கவிழ்க்கப் படவேண்டியது அவசியம். ஆனால் இப்போது நம் மத்தியில் ஏற்பட்டு வரும் ஒழுங்கவிழ்ப்பு அவ்வகையானதல்ல. அந்தக் கட்டுப்பட்டித்தனங்கள் அப்படியே இருக்க உடைகளையும், இப்படியான ரசனைகளையும் ஒழுங்கவிழ்ப்பாகக் கருதிக் கொள்கின்றோம். உண்மையில் அது ஒரு வகையிலான ஒழுக்க அவிழ்ப்பே. அது நாகரிகம் என்ற வெற்றுச் சொல்லின் நாகரிகமற்ற அர்த்தம் மட்டுமே. இது சில வேளைக ளில் நன்மை தரும். பல வேளைகளில் தீமைத்தீயை அள்ளி வீசும்.





▪ ஜெரா

முன்பெல்லாம் பாடல்கள் முதலில் வானொலிகளில் தான் அறிமுகம் ஆகும். பின் அதனை கேட்கும் ரசிகர்களின் தொகையை வைத்தே பாடலின் வெற்றி தோல்விகள் தீர்மானிக்கப்படும். ஆனால் இப்போது அப்படியல்ல. 'வை திஸ் கொல வெறிடி' அறிமுகமே பேஸ்புக் மற்றும் கூகுள் தளங்களில் தான். பாடல் வெளியாகி நான்கு மணி நேரத்திற்குள் பல்லாயிரக் கணக்கானவர்கள் கேட்டிருந்ததை தளங்கள் கணித்திருந்தன.

இந்த அட்டகாச ரசனை விற்பனைக்கு சமூக வலைத்தள சந்தைகளின் பங்களிப்பு தான் முக்கிய காரணம். அத்தோடு பாடல் உருவாகிய பின்னணியும் வலுவான வெற்றியை முன் கூட்டியே அளித்திருந்தது. தமிழ் சினிமாவின் சிகரமான சூப்பர் ஸ்டாரின் குடும்பத்துக்குள்ளால் வரும் முதல் திரைப்படம் '3'. இதனை ரஜனியின் மகள் ஐஸ்வர்யா இயக்க மருமகன் தனுஸ் நடிக்கின்றார். இசையமைத்திருக்கிறார் அனிருத்.இவரும் சூப்பர் ஸ்டார் குடும்பத்தவர்தான். லதா ரஜனியின் சகோதரரின் மகன். முதல் முதலாய் இசையமைத்திருக்கின்றார். முதல் பாடலே ஹிட். இதற்கு அவரின் தனிப்பட்ட திறமைகளும் தாக்கம் செலுத்தியிருக்கின்றன. தமிழ் சினிமாவில் பலமான ஆதரவு இருந்தும் தோற்றுப் போன கதநாயகர்கள் பலர் இருக்கின்றனர். முதல் பாடலிலேயே வந்த வேகத்தில் ஹரிஸ் ஜெயராஜையும் ஏ.ஆர் ரஹ்மானையும் உடைத்திருக்கிறார் அனிருத். ஒரு குடும்ப பின்னணியில் வெற்றிப் பெறப் போகும் திரைப்படம் பற்றிய செலவற்ற விளம்பரம் 'வை திஸ் கொல வெறி டி' பாடல். படம் அந்த குடும்பத்துக்கு கோடிகளை அள்ளிக் குவிக்கப் போகிறது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உயர்வான நடத்தைகளால் உயர்வோம்.



ஓர் ஊரின் ஆலமரத் தடியில் புனிதரான ஓர் ஆசான் தனது சீடர்களுடன் அமர்ந்திருந்தார். அவரது பெருமையை அறிந்த அவ்வூர் மக்கள் அவரை வந்து வணங்கி அவரிடம் ஆசி பெற்றுச் சென்றனர்.

அந்த ஊரிலே தற்பெருமை கொண்ட பணக்காரன் ஒருவன் இருந்தான். அவனோ அந்தப் புகழ் பெற்ற ஆசானின் ஆசியைப் பெற விரும்பவில்லை. ஆனால் அவ்வூர் மக்கள் எல்லோருமே அவரைப் பணிந்து வணங்குதலைக் கண்டு அவனும் ஆசானைப் போய்ப் பார்க்க விரும்பினான்.

தற்பெருமையும் பணமும் அவனிடத்தில் இருந்தமையால் ஆசானைப் பணிந்து ஆசி பெறும் எண்ணமின்றித் தன்னுடனே ஒரு நாற்காலியையும் எடுத்துச் சென்றான். மரத்தடியிலே தரையில் அமர்ந்திருந்த ஆசானுக்கு எதிரிலே அந்த நாற்காலியைப் போட்டு அதிலே உட்கார்ந்தான்.

அவன் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் ஆசான் அமைதியாகப் பதிலளித்துக் கொண்டிருந்தார். இதை அவதானித்த ஆசானின் சீடர்களுக்குக் கோபமும் மனக்கொதிப்புமாக இருந்தது. படிப்பறிவில்லாதவன் தனது பணத்தின் பெருமையால் ஆசானை மதிக்கவில்லை என்பதை அவர்கள் அறிந்து கொண்டனர். பணக்காரன் சென்ற பின்னர் ஆசானைச் சூழ்ந்து நின்ற சீடர்களில் ஒருவன் "ஐயா நீங்கள் தரையிலே அமர்ந்திருக்க அந்தக் கல்வி அறிவே இல்லாத மூடன் உங்களை மதிக்காமல் உங்களுக்கு எதிரில் நாற்காலியில் அமர்ந்திருந்து பேசியது எங்களுக்குப்பிடிக்கவில்லையே" என்றான். அவனது கருத்தை ஏனைய சீடர்களும் ஆமோதித்தனர்.

ஆனால் ஆசானோ "ஒருவன் அமர்ந்திருக்கும் இடத்தில் உயர்வு தாழ்வு இல்லை எனக்கு எந்த அவமானமும் அதனால் ஏற்படவில்லை" என்றார் சீடர்களுக்கு அவரது பதில் கொஞ்சமும் திருப்தியைத் தரவில்லை. அதனை அவதானித்த ஆசான் அவர்களை அழைத்துக் கொண்டு அருகிலிருந்த காட்டுக்குச் சென்றார். அங்கே மரத்தின் மேல் அமர்ந்திருந்து பல்லிளித்த குரங்கொன்றைக் காட்டி "அதோ பாருங்கள் அந்தக் குரங்கு மரத்தின் உச்சியில் இருக்கிறது. நாமோ தரையிலே நிற்கிறோம். அது எங்கே இருந்தாலும் குரங்கு குரங்கு தானே" என்று சொல்லிப் புன்னகைத்தார். இந்தக் கதையை நினைவுறுத்தும் நிகழ்வுகள் பலவற்றையும் இன்றும் நாம் காணுகின்றோம்.

அண்மையில் ஒரு நாள் எனது உறவினரும் ஒரு பாடசாலையின் முன்னாள் அதிபருமான அரியரத்தினம் என்னைச் சந்தித்தபோது

"எனது மாணவன் ஒருவன் ஒரு நிகழ்விலே பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டிருந்தான்.

அவனது வரவு எனக்குப் பெருமையாக இருந்தது. ஆனால் அவனுக்கு அருகிலே அமர்ந்திருந்த என்னை அவமதிப்பதாக எண்ணிக் கொண்டோ அல்லது அறியாமையாலோ அவன் பெற்றுக்கொண்டதை நான் அவதானித்தேன். அவனிடத்தில் எவ்வாறு இத்தகைய பண்புகள் தோன்றின?" என்று வினா எழுப்பியவாறு அவர் அங்கலாய்த்தார்.


"எவ்வாறு நீங்கள் அவனை உங்கள் மாணவனென்று கூறமுடியும். ஒரு பாடசாலையில் படிக்கும் மாணவர்கள் அனைவருமே அப்பாடசாலையின் சிறப்புகளுக்கு அடையாளமாகத் தம்மை வெளிப்படுத்துவதில்லை. இவனோ உங்கள் பள்ளியில் உங்களிடம் படித்தவன் என்று நீங்கள் கூறினாலும் இவன் படித்தவனல்லன்" என்று அவருக்குப் பதிலளித்த நான் எனது நினைவில் அழியாதிருந்த அந்தக் குரங்கின் கதையை அவருக்குக் கூறினேன். அதைக் கேட்டதும் அரியரத்தினம் சற்றே ஆறுதலடைந்தவராக என்னைப் பார்த்தார்.

பதவிகளாலும் பட்டங்களாலும் நாம் உயர்ந்து விட்டோம் எனக் கற்பனை செய்து கொண்டே எம்மிடமிருந்து தொலைக்க விரும்பாத கீழ்த்தரமான நடத்தைகளால் எம்மை நாமே தாழ்த்திக் கொள்ளும் நிலையை நாம் உணராதிருக்கின்றோம். கற்றதன் மூலம் பெற்றுக்கொள்ள வேண்டிய மாண்புகளை இழந்தவர்களாக வாழ்ந்தால், அது வாழ்க்கை இல்லை என்பதை இன்றைய இளைய சமுதாயம் உணர்வதே சிறந்ததாகும்.

■ நெருந்தீவு மகேஷ்

---

# கலைஞரைப் போற்றும் கவிஞர் சிற்பி சிவசரவணபவன்



■ மைதிலி தேவராஜா

கலைகளில் சிறந்தோர் தமது திறன்களால் வாழ்ந்து மக்கள் மனங்களில் நிலைக்கும் போதெழும் குதூகலம் அற்புதமானது. ஆடல் பாடல் ஆகியாம் கலைகளினால் தம்மை மக்களின் மனத்திருத்தி என்றும் வாழ்பவர்கள் இன்றும் பலருள்ளனர். அவர்கள் கலைத்துவ வெளிப்பாட்டால் பலரையும் கவி பாடத்தூண்டுகின்றனர். அத்தகைய சக்தி படைத்தோர் வரிசையில் எம்.எஸ்.சுப்புலட்சுமி தமிழுலகம் போற்ற வாழ்ந்தவர். அவரின் இசை கேட்டு இன்புற்றுக் கவிபாடிக் களிக்கும் மூத்த கவிஞர் ஒருவரை இங்கே காணுகின்றோம்.

சாரீரம் பாவமொடு சங்கீத ஞானலயம்
சீராய் இணைந்தெழுந்த தேனோசை - பாரினிலெம்
எஸ் சுப்பு லட்சுமியாம் ஏழிசை வல்லபியாள்
வில்வரு பத்திதந்தல் வித்து

சங்கீத ஞானத்தில் மேலானவர் சாரீரம், பாவம், லயம் எனச் சீராக இசைத்துப் பாடும் திறன் மிக்கவர் தேன் போன்றினிக்கும் இசை அவருடையது ஏழிசையிலும் வின்னரூபம் கொண்டிசைக்கும் வல்லமை மிக்கவர் எம்.எஸ் சுப்புலட்சுமி என்கிறார் கவிஞர்.

சதாசிவம் எனுமிசைப் பிரியன் புருஷராய்ச்
சார்ந்ததும் உத்தன் பேறே
கதாவலர் கல்கிரா. கிருஷ்ணமூர்த்தி யுன்திறம்
கணித்ததும் உத்தன் பேறே
பிதாதிகர் காந்திரா ஜாஜிநே ருக்கிசை
பெய்ததும் உத்தன் பேறே
உதாரணக் கலைஞராய் உச்சியில் என்றும் நீ
ஒளிர்ந்ததோ எங்கள் பேறே

சதாசிவம் கணவராய்க் கிடைத்ததும் கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி, காந்தி, ராஜாஜி, நேரு போன்றோர் உம்மைச் சிறந்த கலைஞராய்க் கணிக்கவும் மதிக்கவும் தக்கதாய் இசையினால் உயர்ந்தமையினூடே புகழ் கிடைத்தது. உமது காலத்தில் வாழ்ந்த எமக்கும் நீர் பாடி மகிழ்ந்த உமது இசையைக் கேட்கக் கிடைத்தமை எமது பெரும் பேறாகும்.

காற்றிலே வந்தவுன் கீதமே கேட்டுளம்
களித்தவர் கோடி கோடி
மாறிலாத் தங்கமாம் மணிகுர லும்மிசை
மாந்தினோர் கோடி கோடி
ஏற்றெழில் பெற்ற எம். எஸ்இசைக் கென்றுகாத்
திருந்தவர் கோடிகோடி
கூற்றுவன் உன்னுயிர் கொய்ததைக் கேட்டபின்
குமுறினோர் மேலும் கோடி

உமது இன்னிசை கேட்கக் காத்திருந்து உமது இனிய கீதம் கேட்டுக் களித்தவர் கோடானு கோடி. பேர்கள் உள்ளனர் அவர்கள் எல்லோரும் இன்று உமது மறைவுச் செய்தி கேட்டு மனம் குமுறி அழுகின்றனர்.

பல அறப் பணிகளுக் குதவுதற் காகநீ
பாடிடும் பாங்கு கண்டோம்
விலைமதிப் பேயிலா வித்தையால் ரசிகரை
வென்றவுன் மேதை கண்டோம்
உலகினர் சபையிலே உன்னிசை பருகிநாம்
உவகையின் உச்சி கண்டோம்
நிலமிசை யென்றுமே நின்பெயர் புகழெலாம்
நிலைபெறும் உண்மை காண்போம்.

அறப்பணிகளுக்காக விலைமதிப்பில்லாத வித்தையை ஈய்த்து உதவினீர்கள். உங்களின் இசையைக் கேட்டு இன்புற்ற மக்கள் என்றும் உங்களைப் போற்றுகின்றனர். நீங்களோ மறைந்தாலும் இந்த உலகம் உள்ளவரை உங்கள் நாமம் அழியாது என்கிறார் கவிஞர். எம்.எஸ்.சுப்புலட்சுமியின் இசை கேட்டு இன்புற்றுப் பாடுகிறார் கவிஞர் சிற்பி சிவசரவணபவன் அவர்கள்.

சிறுகதை, கவிதை என்பவற்றால் இலக்கிய உலகில் உயர்ந்த எழுத்தாளராகப் போற்றப்படுபவர். மல்லிகைதொரு கலைஞர் ஆசிரியராய் அதிபராய்த் திகழ்ந்தவர். எழுத்தும் வாழ்வும் இணைந்த பண்பினர். யாழ்ப்பாணம் சுதுரோடையை வதிப்பிடமாகக் கொண்ட இலக்கியவாதி. கலைச்செல்வி கலை இலக்கியப் பத்திரிகையின் புகழ் பெற்ற ஆசிரியர்.

அவரது எண்ணிறந்த இலக்கியச் சிறப்புகளுடன் எதிர்கால மொழி வல்லமைக்கும் வழிகாட்டும் பணியைத் தொடருகின்ற புகழ் நிலைக்க வாழ்த்துகிறோம்.

படைப்பாளிகள் தங்கள் பிரசுரங்கள், வெளியீடுகள் தொடர்பான அறிமுகம் சுடர் ஒளி வார மலரில் வெளிவருவதை விரும்பினால், அவற்றின் இரு பிரதிகளை கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

சுடர் ஒளி வாரமலர்
361, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைக்கென்ற நல் பாரம்பரியம், கலை, கலாசாரங்களைக் கொண்டதாகவும் கல்விப்பற்றலில் உலகம் வியக்கக்க கலைகளில் மிளிர்ந்து எம் தமிழினம் இன்று சகல தாற்பரியங்களையும், விழுமியங்களையும் இழந்த நிலையில் பிறந்த மண்ணிலும், புலம்பெயர்ந்து வெளிநாடுகளிலும் சிதறுண்டு உறவுகளைப் பிரிந்து களையிழந்து சோபையிழந்து எதிர்காலம் குறித்துக் கேள்விக் குறிகளுடன் அல்லாடிக் கொண்டிருக்கின்றது.

இலங்கை ஓர் ஜனநாயக நாடு எனப் பெயரளவில் கூறப்படுகிறதே தவிர, இங்கு வாழும் மக்கள் எவரும் முழுமையான சுதந்திரத்தினையும், அவரவர்க்குரிய உரிமைகளையும் பூரணமாக அனுபவிக்கின்றார்களா? என்பது கேள்விக் குறியாகவும், அதே சமயம் மக்களையது கொல்லப்பட்டனர் எனப் புள்ளிவிபரங்கள் செய்திகள் வாயிலாகவும், இணையத்தளங்களின் ஊடாகவும் அறியமுடிந்தது.

ஆனால் இதனை மறுத்துவரும் அரசின் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் இரண்டொரு தினங்களின் முன்னர் கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் இறந்தவர்களின் எண்ணிக்கை தவறாக இருக்கும் எனவும், தற்பொழுது மாவட்டரீதியில் தொகையைக் கணிப்பிட அரச ஊழியர்கள் மூலம் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதெனவும் கூறியுள்ளார்.

கடந்த மாதம் தமிழ்ச்செய்தித்தாள் ஒன்றில் யாழ்மாவட்ட அரசாங்க அதிபரான திருமதி.இமெல்டா சுகுமார் வடபகுதியில் மட்டும் 27000 பேர் விதவைகளாக்கப்பட்டுள்ளனர், மற்றும்





# ஆசியாவின் அதிசயம் ஆவதற்கு..

■ யஸ்ரின்

கேள்விக்குரியதாகவும் உள்ளது!

அந்நாட்களில் இருந்தே தமிழ் மக்களின் மீது அடக்குமுறைகள் நடத்தப்பட்டு, உரிமைகளும் மறுக்கப்பட்ட வையிலேயே இனத்தின் உரிமைப் போராட்டங்களின் இறுதி அது வன்முறையாக விரிவாக்கம் பெற்று மோசமான உள்நாட்டு யுத்தத்திற்கு வழிவகுத்து இறுதியில் நாட்டினின் முக்கியமாக வடக்கு கிழக்கில் பாரிய உயிரழிவுகளையும், சொத்தழிவுகளையும் ஏற்படுத்தி மிதமாக இருக்கும் தமிழ்ச்சமூகத்தினை நலிவடையவும் வலுவிழந்தோர்களாக அரசியல் ரீதியாகவும் பாதிப்படைந்தவர்களாகவும் பொருளாதாரத்துடன் எதிர்காலம் பற்றிய சிந்தனைக்கே எண்ணவும் சிந்திக்கமுடியாத நிலைக்குப் பாதாளக்குழியில் தள்ளிவிட்டுள்ளது.

பன்னாட்டு மனிதநேய அமைப்புகளின் கணிப்பீட்டின்படி 2009இல் மனிதநேய நடவடிக்கை எனும் பெயரில் அரசினால் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகளின் இறுதியில் ஆகக்குறைந்தது எண்பதினாயிரம் பல்லாயிரக் கணக்கான சிறுவர்கள் அனாதைகளாக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவித்திருந்தார். இதனூடாக நாம் கொல்லப்பட்டோரின் தொகையினை ஓரளவு ஊகிக்க முடியும்.

பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டு விட்டது. பிரபாகரன் முதற்கொண்டு மூத்த தளபதிகள் யாவரும் மாண்டுவிட்டனர். சிறீலங்காவின் எந்தப் பகுதியிலும், அச்சமின்றி நடமாடலாம் என எம் ஜனாதிபதி அவர்கள் நாட்டிற்குப் பகிரங்கமாக அறிவித்தார்.

"நடந்தவை யாவும் நடந்துவிட்டவையே. எனினும் எல்லோரும் சகல வடக்கு-கிழக்கு மக்களினதும் உயிர்களைத் தவிர ஏனைய சகலத்தையும் அதாவது, சொத்துக்கள், வாழ்வாதாரம் என்பவற்றை மீளப்பெற்று அனைவரையும் வளமாய் வாழ வழி சமைப்பது எனது மகிந்த சிந்தனையின் தார்மீகக் கடமையும், பொறுப்பும் ஆகும்" என அகில உலகமும் வியப்புறுமாறு, கேள்விக்குறியுடனும் பார்க்கும் வண்ணம் பறைசாற்றினார்.

போர் முடிவடைந்து 21/2 வருடங்களுக்கு மேலாகிவிட்டது இன்னமும் மீள்குடியமர்வு முடிவடைந்தபாடாயில்லை. அதுமட்டுமா? சில இடங்களில் மீள்க்குடியமர்விற்காகக் கொண்டு செல்லப்பட்ட பல குடும்பங்கள் அவர்களின் காணிகளை படையினரின் தேவைகளுக்காகச் சுவீகரிக்கப்பட்டமையால் அவர்களில் சிலர் இன்னமும் நடுத்தெரு நாராயணிகளாகவும் சிலர் நண்பர்கள் அல்லது உறவினர்களுடனும் தங்கி அல்லலுறுகின்றனர். மேலும் சிலகுடும்பங்கள் அரசினால் நிறுவப்பட்டுள்ள தற்காலிக முகாம்களில் அவர்களின் ஊர்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இதற்கப்பால் ஒரு பக்கத்தில் தடுப்பு முகாம்களில் புனர்வாழ்வளிக்கப்பட்டுவரும் கணவன்மார்கள் என்று தாயுடன் வந்திணைவர் எனத் தம்பிள்ளைகளுடன் ஏங்கித்தவிக்கும் மனைவிமார்கள் மறுபக்கத்தில் தடுப்பில் உள்ள தம் பிள்ளைகள் விரைவில் விடுதலையடைந்து தம்மிடம், வந்து சேர்ந்து தங்களைப் பராமரிப்பார்களென்னும் நம்பிக்கையில் வறுமையிலும் நோயிலும் அவதியுறும் பெற்றோர்களின் துன்பங்கள் என எங்குமே சோகத்தின் சாயல்.

இவ்வாறாகப் பல சொல்லொணாத் துன்பங்களின் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழினத்திற்கு விடிவு என்று? எப்போது? எங்ஙனம்? விடை புதிராகவேயுள்ளது மிஞ்சு மழலைகள், சிறுவர், சிறுமியர், ஆண்கள், பெண்கள், முதியோர் எனப் பேதமேதுமற்று அப்பாவி மக்கள் அநாதரவாக்கப் பலியாகும் வேளையிலும் சற்றேனும், அது குறித்துக் கவலைப்படாது அரசின் இராணுவ நடவடிக்கைகளுக்கு இலங்கையில் ஒத்துழைப்புகளை வழங்கியும், அநேகமாக மேற்குலக நாடுகளை இலங்கைப் பிரச்சினையில் தலையிடாமல் அனைவரும் பார்த்துக் கொண்ட இந்தியா புலிகளை அழித்தொழித்ததன் பின்னராவது அனைத்து வழியிலும் பாதிக்கப்பட்டுக் குற்றுயிரான நிலையில் தவிக்கும் ஈழத் தமிழர்கள் குறித்து எவ்வித ஆக்கபூர்வமான நடவடிக்கையினையும் எடுக்காது தன்னாதிக்கத்தை இலங்கையில் நிலை நிறுத்துவதிலேயே கண்ணும் கருத்துமாக உள்ளது. வடக்கில் தனது தூதரகக் கிளை, வங்கிக்கிளை திறந்து வைப்பதிலும் வர்த்தக முதலீடுகளைச் செய்வதிலுமே முக்கிய கவனம் செலுத்துகின்றது.

இது ஒருபுறமிருக்க ஐ.நா.தொடக்கம் பல மேற்கத்தைய நாடுகள் மனிதநேய அமைப்புகள் ஈழத்தமிழர்களின் நிலைகுறித்து அடிக்கடி குரல் எழுப்புகின்றன. பின்னர் அந்நாடுகளின் இராஜதந்திரிகளும் இலங்கைக்கு விஜயம் செய்கின்றனர் பின்னர் அவை யாவும் மௌனமாகிவிடுகின்றன. அல்லது மௌனிக்க வைக்கப்படுகின்றனவோ புரியவில்லை.

இன்று மிகவும் பிரதானமான இன்றியமையாத தேவையாகவுள்ளது வெறும் மேடைப் பேச்சுக்களும், போலி வாக்குறுதிகளுமல்ல. விரைவுடன் கூடிய யதார்த்தமான ஆக்கபூர்வமான செயற்பாடுகளேயாகும். மீள்குடியமர்ந்தோரை அவரவர் சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்து ஏற்ப காணியற்றோருக்குக் காணிகளை வழங்குதல். சேதமுற்ற வீடுகளைப் புனரமைக்க நிதி வசதியினை வழங்குதல், வீடற்றோருக்கு தற்சமயம் தற்காலிக வீடுகளை வழங்கிப் பின்னர் நிரந்தர வீட்டுத்திட்டத்தின் மூலம் வீடுகளை வழங்குதல். அவரவர்க்கு இழப்புகளுக்கு ஏற்ற நஷ்டஈடுகளை உரிய காலத்தில் வழங்குதல். அத்துடன் அவர்களது ஜீவனோபாயத்திற்கான நிதிவசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து அவர்களது வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துதல் என்பவையேயாகும். இவற்றினூடாக அவர்களது இன்னல்களைத் தீர்க்கமுடியும்.

அத்தோடு நின்றுவிடாது தடுப்பில் புனர்வாழ்வு முகாம்களில் உள்ளோரையும் விரைவில் சமூகத்துடன் இணைத்து அரசியல் கைதிகளாக எதுவித விசாரணைகளுமின்றியும் நீதிமன்றில் வழக்கேதும் தாக்கல் செய்யப்படாமலும் நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சகலரையும் உரிய நீதியான நடவடிக்கைகளினூடாக விடுதலை செய்வதும் இன்றியமையாத தேவையாகும்.

இதனைவிடுத்து, வடக்குக் கிழக்கில் இராணுவத்தின் பிரசன்னத்தை அதிகரித்து மக்கள் மனதில் அச்சத்தை ஏற்படுத்துவதின் மூலம் பிரச்சினைகள் ஏதும் தீராது அதுமட்டுமல்லாது சர்வதேசமும் எதிர்பார்க்கப்படும் மீள் நல்லிணக்கமும் எட்டாத கனியாகவே அமையும் என்பதில் ஐயமில்லை.

எனினும், மேதகு ஜனாதிபதி அவர்களின் 'மகிந்த சிந்தனை' யின் எண்ணக்கருவான சகல இனங்களும் ஒருங்கிணைந்து நல்லுறவுடன் வாழும், பொருளாதார அபிவிருத்தியும் சமாதானம் நிலவும் நாடாக இலங்கை திகழ வேண்டுமெனில் நீச்சேர இனத்தவரின் அடிமைத் தளையை நீக்கி உலக வரலாற்றில் அழியாப் புகழ் பெற்ற அமெரிக்க அந்நாள் ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கனைப் போல ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களும் போற்றப்படுவார்.


அதுமட்டுமல்லாது, இந்து சமுத்திரத்தின் முத்தெனச் சொல்லப்படும் இலங்கை விரைவில் ஆசியாவின் அதிசயமிக்க நாடாக விளங்கும் மென்பதிலும் எதுவித சந்தேகமுமில்லை.

ஆனால் இது சாத்தியமா என்பதுதான் கேள்வி.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணர்திறன் கொண்ட அதிநவீன ரோபோ



இது இத்தாலிய தொழில்நுட்ப நிறுவனத்தில் உருவாக்கப்பட்ட அதிநவீன ரோபோ ஆகும். அவ்வமைப்பில் லண்டனில் நடைபெற்ற விஞ்ஞான கண்காட்சி ஒன்றில் இது காட்சிப்படுத்தப்பட்டது. இந்த நவீன ரோபோவை வடிவமைத்து உருவாக்கிய விஞ்ஞானிகள் பல்கலைக்கழக மாணவர்களையும் அருகில் காணலாம். இந்த ரோபோ உணர்திறன் உடையதாகும்.









ஹோட்டல் துறையில் மேல் படிப்பு இலவசம்

புறகிறஸ்சோ - இலவசம் - தொழில் மற்றும் துறைசார் நிபுணத்துவம்.

ஹோட்டல் முகாமைத்துவம், சமையல் மற்றும் சர்வீ வேலைகளுக்கான தொழில் பயிற்சிகள். படிப்புக் காலங்களுக்கு வேலையிடத்தில் விடுமுறை பெற்றுத் தரப்படும்.

நேரடியாக இணையத்தில் அல்லது தொலைபேசி மூலம் பதிவு செய்யலாம்.

www.progresso-lehrgang.ch

| Hotel & Gastro *formation* | Eichistrasse 20 | 6353 Weggis
| Telefon +41 (0)41 392 77 33 | Fax +41 (0)41 392 77 70
| progresso@hotelgastro.ch | www.progresso-lehrgang.ch



உலகின் முதலாவது பல் மொழி தமிழ் அகராதி, தமிழ், ஆங்கிலம், டொச், பிரெஞ்சு, இத்தாலி, நெதர்லாந்து, டெனிஷ், சுவீடிஸ், சிங்களம் ஆகிய பத்து மொழிகளைக் கொண்ட அகராதி. உங்கள் கையடக்கத் தொலைபேசியில் பதித்துக்கொள்ளலாம்.

மொழி பயில்பவர்கள், பாடசாலை மாணவர்கள், ஐரோப்பிய நாடுகளில் பயணம் செய்பவர்கள் அவசியம் வைத்திருக்க வேண்டிய ஒரு மென்பொருள்.

தொடர்புகளுக்கு சுரேந்திரன்,

இலங்கைத் தொடர்புகளுக்கு 077 266 56 25,

Tel. 0041 61 813 15 52

www.tamilkadai.ch

உங்கள் கைபேசியில்

für Handy



10 மொழி அகராதி

Sprache Wörterbuch

ஏஜண்டுகளுக்கு நல்ல கமிசன்



# Sudar Oli

வார மலரை ஐரோப்பாவில்
தபால் செலவை மட்டும் செலுத்தி வாராந்தம்
இலவசமாகப் பெற்றுக்கொள்ளவும்.
பிறந்தநாள் வாழ்த்துக்கள், மரண அறிவித்தல்கள்
மற்றும் அனைத்து விளம்பரங்களும்

Sudaroli, Post fach 60,
4302 August, Switzer land,
Tel: 0041 61813 15 52

Mail: info@tamilkadai.ch





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் பிரசித்தமான இடங்கள் சில


சவுதி அரேபியாவில் மக்கா




பொனகல்லோட் கோட்டை பிரான்ஸ்




குனபுளாய் குடா ஐஸ்லாண்ட்



சிட்னி ஒபேரா அரங்கம்




கரெஸ்செட் மிலேனியம் பாலம், இங்கிலாந்து



பிறன்டன் பேர்க் வாயில் ஜேர்மனி



லண்டன் கோபுரப் பாலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைப் புனல்

## தமிழழகி



செங்கமலப் பாதம்
செங்காந்தள் விரல்கள்
செவ்வந்தி வாசம்
செம்மாதுளைக் கன்னம்
செம்பவள அதரம்
செந்தமிழ்ப் பேச்சு
வெண்பளிங்கு மேனி
[illegible]
சிறுமுல்லைப் பற்கள்
சிற்றுடுக்கை இடை
[illegible]
சித்திரப் பூந்தேர்
இத்தனைக்கும் ஒரு வடிவம் மங்கை
இவள் பெயரோ தமிழழகி!

சேனையூர் கீ
முத்துக் கிருஷ்ணா

## வாழ்வின் காயங்கள்




ஆழமான ஆசைகளால்
அலைபாயும் கனவுகள்
தகர்க்கப்படுகின்றன.
[illegible]
[illegible]
உணர்வுகள்
[illegible]
விடியும் முன்னும்
முடிவடைந்துவிடும்
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
வலம் வருகின்றன....

— [illegible]

## பிரியாத நம் உறவு

உன் நினைவுகளைப் போல்
உன் பிரசன்னங்கள்
[illegible]
வெளிப்படுத்தும் போது
[illegible]

உன் தொடுகையைப் போல்
[illegible]
பனியைப் போல
[illegible]
இருந்தாலும்
உன்னை
[illegible]
[illegible]
கைதியாய்
உன்னருகே
[illegible]





[illegible]
நம் அன்புறவு
[illegible]
அனுப்பிக்கிறது.
போகட்டும்....
நம் உடல்கள் மட்டும்
[illegible]
நம் அன்புறவு....
[illegible]
[illegible]
[illegible]

நிலாயன்

## காத்திரு



காதல் எனும் புது உலகை
உன்னாலே கண்டேனே
காத்திருக்கும் காலமெல்லாம்
ஒரு சுகம் உன் நினைவுதானே

வானில் நாம் சிறகடித்துப் பறக்க
வேடன் எம்மில் குறிவைத்தான்
சிறகுடைந்த பறவையானாலும்
எம் காதலோ உடையவில்லை.
உன்னைப் பிரிந்து
ஒன்றரை வருடங்கள் ஆனாலும்
உன் நினைவுகளோ
பல உள்ளதடா.

உனக்கென நான்பிறக்க
எனக்கென நீ பிறந்தாய்
எம் இருவரையும் சேர்த்துவைக்க
ஆண்டவன் இருக்கின்றான்.

எஸ். [illegible]

## தீரா வலி




[illegible]

## உண்மையும் உறங்குமா?



உண்மைக்குள்ளும் - பல
உண்மைகள் உறங்கிப்
போக- உண்மையான
எம் வாழ்வின்
உரிமைகளும்
புதைக்கப்பட - எம்மாலே
எம் வாழ்வு
தடம் மாறிப் போனது
என்னவோ உண்மைதான்
இந்த உயிருள்ள
உண்மையும்.....
உறங்குமா......?

பேருவில்
[illegible]



[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஜய் நடிக்கும் துப்பாக்கி



விஜய் புதிதாக நடிக்கவிருக்கும் படத்திற்கு துப்பாக்கி என்று பெயரிடப்பட்டுள்ளது. இப்படத்தை இயக்குநர் ஏ.ஆர். முருகதாஸ் இயக்குகிறார். கமல் நடிப்பில் வெளிவந்த நாயகன் பட பாணியில் இந்தப் படம் உருவாக இருப்பதாகவும், படத்திற்கு பட்ஜெட் ரூ.65 கோடி என்றும் கூறப்படுகின்றது. விஜய் படத்துக்கு இவ்வளவு பெரிய பட்ஜேட் இதுவே முதல் முறை என்பது குறிப்படத்தக்கது.



# சிம்பு போட்டக் கட்டளை

'வேட்டை மன்னன்'. பாடல் காட்சிகளில் துக்க டிரஸ் அணிந்து குத்தாட்டம் போட டபுள் ஓ சொல்லியிருக்கிறார் ஹன்சிகா. இதனால் அ கேட்டதை விட கூடுதல் சம்பளம் வாங் கொடுத்து படம் முடியும் வரை எந்த ப திலும் நடிக்க கூடாது என்று கட்ட யிட்டாராம். இதனால் புலம்புகிறா நடிகை ஹன்சிகா.

# அரவாணிகள் பற்றிய பாடல்




இயக்குநர் பன்னீர்செல்வம் இயக்கும் படம், 18 வயசு. இதில் ஜானி ஹீரோ. காயத்ரி ஹீரோயின். அவர்களின் வலியைக் குறிப்பிடும் விதமாக பாடல் ஒன்றை யுகபாரதி எழுதியுள்ளார். 'ஆணுமில்ல, பொண்ணுமில்ல, ஆனா, நாங்க நடுவுல' என்கிற அந்தப் பாடல் நெஞ்சை உருக்குவதாக இருக்கும். இவ்வாறு ஆர்.பன்னீர்செல்வம் கூறினார்.

# பிரிவின் வேதனையை கூறும் நயன்



கணவனை மனைவி பிரிந்தால் எப்படி கஷ்டப்படுவார் என்று ஸ்ரீ ராமராஜ்யம் படத்தில் சீதையாக நடித்த போதுதான் உணர்ந்ததாகவும் இந்தப் படத்தின் அனுபவம் தன்னை மனதளவில் பெரிய மாற்றத்துக்குள்ளாக்கியிருப்பதாகவும் நடிகை நயன்தாரா கூறியுள்ளார்.

# மாணவி வேடம் கஷ்டம்



இதுவரை நடித்த படங்களில் அதிகம் நடித்தது கல்லூரி மாணவி வேடம் தான். தமிழில் தற்போது நடித்துக் கொண்டிருக்கும் காந்தர்வன் படத்திலும் அதே வேடம்தான். எல்லோரும் கல்லூரி மாணவியாக நடிப்பது எளிது என்று நினைக்கிறார்கள். அது தவறு. அந்த வேடத்தில் நடிப்பது கஷ்டமானது என்கிறார் நடிகை ஹனிரோஸ்.



# விக்ரமின் ஆக்ஷன் படலம்!

மற்ற நடிகர்கள் செய்யத்துணியாத வேடங்களையும் வெளுத்துக்கட்டக்கூடிய நடிகர் சீயான் விக்ரம். சுசீந்திரன் இயக்கத்தில் நடிக்கும் ராஜபாட்டை, மதராசப்பட்டினம் விஜய் இயக்கத்தில் நடிக்கும் தாண்டவம் ஆகிய இரண்டு படங்களுமே முழு கமர்சியல் படங்கள்தான். அதாவது 'சாமி, தில்' போன்ற முந்தைய ஆக்ஷன் பட பாணியில் இந்த படங்கள் உருவாகின்றன.



# பாடல் சாதனை

3 படத்தில் தனுஷ் எழுதி பாடியிருக்கும் கொலை வெறி டி பாடல் ரசிகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது. 4 நாட்களில் 10 லட்சம் பேர் வரை இந்தப்பாடலை கேட்டு இருக்கிறார்கள்.



# வாய்ப்பை மறுத்த கீரத்தனா

கன்னத்தில் முத்தமிட்டால் படத்தில் குழந்தை நட்சத்திரமாக நடித்திருந்த கீர்த்தனா இப்போது தோளுக்கு மேல் வளர்ந்த தோழியாக நிற்கின்றார். மணிரத்னம் இயக்கும் புதிய படத்தில் நடிப்பதற்காக கீர்த்தனாவை மணிரத்னம் தொடர்புகொண்ட போது அங்கிள் எனக்கு நடிப்பதில் விருப்பம் இல்லை. என்னை உங்க அசிஸ்டென்டா சேர்த்துக்கிறீங்களா? என்றாராம். உடனடியாகவே அசிஸ்டென்டா சேர்த்துக்கொண்டாராம் இயக்குநர் மணிரத்னம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டளை

...காட்சிகளில் துக்கடா
...போட டபுள் ஓ.கே
...சிகா. இதனால் அவர்
...தல் சம்பளம் வாங்கிக்
...டியும் வரை எந்த படத்
...ாது என்று கட்டளை
...னால் புலம்புகிறார்



## கிக் பொக்ஸிங் கற்கும் சஷான்

தமிழில், கனிமொழி படத்தில் ஜெய் ஜோடியாக் நடித்தவர் இந்தி நடிகர் சஷான் பதம்ஸி. ரொம்ப ஸ்லிம் ஆகியிருக்கிறீர்களே...எப்படி? என்று கேட்கிறார்கள். தினமும் கிக் பொக்;ஸிங் கற்கிறேன். இது உடலை பிட்டாக வைத்திருக்கவும் உதவுகிறது. இவ்வாறு கூறினார் சஷான்.




## நம்பர் 66 மதுரை பஸ்

நம்பர் 66 மதுரை பஸ் என்ற படத்தை வைரம் படத்தை இயக்கிய நிஷாத் இயக்குகிறார். கேரளாவிலுள்ள புனலூரிலிருந்து மதுரை வரும் பஸ்ஸில் நடக்கும் சம்பவங்களும் பிரச்னைகளுமே கதை. கதையின் நாயகனாக பசுபதி நடிக்கிறார்.






## விமர்சனம்

(முன்பாதியில் போலீஸ், பின் பாதியில் தாதா... என புதுமைப்பித்தன் பார்த்திபன் வித்தியாசமும், விறுவிறுப்புமாக யோசித்திருக்கும் படம் தான் வித்தகன் எனும் வித்-த-கன் திரைப் படம்! பார்த்திபனின் அப்பா சம்பத்ராம், ஆசை ஆசையாய் பார்த்து வந்த போலீஸ் வேலையை அம்போ என விட்டுவிட்டு வேறு வேலை, வேறு ஊர் என குடும்பத் தோடு குடிபெயர காரணமாகிறார் வில்லன் மிலிந்த் சோமன். அவரைப் பழி வாங்க, தன் அப்பா மற்றும், குடும்பத்திற்கே தெரியாமல் அநாதை என்று சொல்லி ஐ.பி.எஸ். ஆபிஸராகும் பார்த்திபன், உத்தியோகத்தில் நேர்மையாகவும், புதுமையாகவும் செயல்பட்டு நல்ல பெயர் எடுக்கிறார். இவரது நற்பெயரால், கெட்டதை மட்டுமே சம்பாதித்து வரும் உயர் அதிகாரியின் கைகளில், பார்த்திபன் அநாதை அல்ல, அவருக்கு குடும்ப பின்னணி உண்டு எனும் தகவல் ஆதாரபூர்வமாக கிடைக்கிறது. அதையே காரணமாக வைத்து பார்த்திபனை போலீஸ் உத்தியோகத்தில் இருந்து தூக்குகிறார் அந்த அதிகாரி! அப்புறம்? அப்புறமென்ன...? தானும், தன் தந்தையும் போலீஸ் வேலையை விட்டுப் போக காரணமாக இருந்தவர்களையும், சமூகத்தில் ஒழுக்கம் கெட காரணமாக இருப்பவர்களையும் பார்த்திபன் எப்படி அழிக்கிறார் என்பது வித்தகன் படத்தின் விஸ்வரூப மீதிக்கதை!

போலீஸ் - தாதா என இரு வேறு துருவங்களில் நின்று, சமூகத்தை காக்கும் வித்தகனாக வித்தியாசமான வேடங்கள் ஏற்றிருக்கும் பார்த்திபன், மற்ற ஹீரோக்கள் மாதிரி பஞ்ச் டயலாக் பேசி ரசிகர்களின் செவிகளை பஞ்சராக்காமல், நீங்க துப்பு துலக்கிட்டீங்க... இங்க எவனோ துப்பிட்டு போயிருக்கான். என்பது உள்ளிட்ட எதிராளிகளை டேஞ்சர் ஆக்கி, டின்ஜர் போட்டு விடும் டயலாக்குகளில் ஒரு சேர கண்ணையும், கருத்தையும் கவருகிறார். நீண்ட இடைவெளிக்குப்பின் பார்த்திபன் படம் பார்த்த திருப்தி ஒன்று போதும் என்றாலும், முன்பாதி போலீஸ் பார்த்திபனின் கம்பீரமும், காமெடியும் ஓ.கே. பின்பாதி தாதா பார்த்திபனின் தோற்றம் ஆங்காங்கே சாதாவாக தெரிவது மைனஸ்! அழகு பதுமையாக பூர்ணா, பார்த்திபன் செய்யும் கொலை ஒன்றை கண் எதிரே பார்த்தும்கூட அவரை காதலிக்க தொடங்குவது நம்ப முடியாத சுத்த ஹம்பக். மற்றபடி, பூர்ணாவின் புடவையில் வரையப்பட்டிருக்கும் பூக்கள் கூட, கிராபிக்ஸில் மெய்யான பூக்களாய் மலர, மலர வெளிநாட்டு லொகேஷன்களில் டூயட் பாடிய படி பார்த்திபனை காதலிப்பதெல்லாம் சூப்பர்! ஓ.கே. கடைசிவரை பார்த்திபன் தனக்கேன் வில்லன் ஆனார்...? என்பது தெரியா மலே, பார்த்திபனால் கொல்லப்படும் இண்டர்நேஷனல் வில்லன் மிலிந்த் சோமன், பார்த்திபனின் அப்பாவாக, பொறுப்பான போலீஸ்காரராக ப்ளாஷ்பேக்கில் வரும் சம்பத்ராம், மினிஸ்டர் மோகன் நடராஜன், அவரது கெட்ட மகனாக கொஞ்ச நேரம் வந்து, செத்து போகும் வின்சென்ட் அசோகன், பார்த்திபனுக்கே பின்பாதியில் டானாக வந்து பார்த்திபனாலேயே டப்பென்று சுடப் படும் ரவிசங்கர், ஒருபாடலில் மைக்கும் கையுமாகத் தோன்றி மறையும் ராக்கி பார்த்திபன்(பார்த்திபனின் ஆண் வாரிசு...) உள்ளிட்ட எல்லோரும் கச்சிதம்!

ஜோஷ்வா ஸ்ரீதரின் இசையில், ரா.பார்த்திபனே 6 பாடல்களையும் எழுதி இருக்கிறார். இக்குதே கண்கள் விக்குதே... பாடல் மட்டுமே அடிக்கடி காதில் ஒலிக்குதே... எனப்பாராட்டும்படி இருக்கிறது. அண்டனியின் படத்தொகுப்பும், எம்.எஸ். பிரபு-ராம்நாத் ஷெட்டியின் ஒளிப்பதிவு உள்ளிட்ட ப்ளஸ் பொயிண்ட்டுகளுடன் ரா.பார்த்திபனின் கதை, திரைக்கதை, வசனம், பாடல்கள் இயக்கத்தில் வித்தகன், வசனத்திலும், இயக்கத்திலும் பளிச்சிட்டிருக்கிறது! ஆக மொத்தத்தில் வித்தகன், கெட்டவர்களுக்கு எமகாதகன்! ரசிகர்களுக்கு...?!





## சங்ககால கதை பாலை

சங்ககால தமிழர்களின் வாழ்க்கை இந்தப் படம், சங்க காலத்தில் நடப்பது போல் கதையம்சம் கொண்டது இப்படம். அந்த காலகட்டத்தில் வாழ்ந்த சராசரி தமிழர்களின் வாழ்க்கையை சொல்லும் படம் இது. ஒரு வலிமையான குழு, தங்கள் நிலத்தை பறித்துக் கொள்ளும்போது எளிய குழு அதை எப்படி போராடி மீட்கிறது என்பது கதை, சுவாரஸ்யத்துக்காக காதலைச் சொல்லியிருக்கிறோம். புதுமுகம் சுனில், ஷம்மு நடித்துள்ளனர். வன்முறை காட்சிகள் அதிகம் இருப்பதாக கூறி தணிக்கை குழு, 'ஏ' சான்றிதழ் வழங்கி உள்ளது.




பிந்து மாதவி

## ...பை ...த்தி ...னா

...டத்தில்
...இருந்த
...து மேல்
...ர்.
...டத்தில்
...மணிரத்னம்
...ங்கிள்
...இல்லை.
...
...ம்.
...டா
...க்குநர்

## 'சில்க்'கின் அவதாரம்

நடிகை பிந்து மாதவி மறைந்த நடிகை சில்க் ஸ்மிதாவை போன்று அப்படியே இருக்கிறார் என்று கழுகு படவிழாவில் நடிகர் விஜய்யின் அம்மா கூறியுள்ளார். இப்படி பிரபலங்கள் பலர் மாறி மாறி தன்னை புகழ்ந்ததில் அதிகமாகவே நெகிழ்ந்து போனார் நடிகை பிந்து மாதவி. தமிழில் சில்க் ஸ்மிதாவின் வாழ்க்கையை நடிக்க வாய்ப்பு கிடைத்தால் நிச்சயம் நான் நடிப்பேன் என்று கூறினார் நடிகை பிந்து மாதவி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நிஜ/சினிமா பெயர் : த்ரிஷா
பிறந்தது : சென்னை
படிப்பு முடித்தது : பி.பி.ஏ., எத்திராஜ் கல்லூரி
முதல்படம் : மௌனம் பேசியதே (1999),
முதல் படம் வெளியீடு ஆச்சர்யம் : விக்ரமுடன் சாமி படத்தின் போது திருப்பம் சென்றது.
மறக்கமுடியாத நபர் : [illegible] (இன்றும் அவரின் படங்களை வைத்து பக்கமாக வச்சிருக்கேன்)
அதிகமுறை பார்த்த படம் : ஆங்கில படங்கள், பெரிய லிஸ்ட்டே இருக்கு

# இதுவரை நான் சொல்லாதது

அடிக்கடி பயன்படுத்தும் வார்த்தை : ஓ காட்.
பிடித்த உணவு : அம்மா சமைக்கும் பிரியாணி
தவிர்க்க விரும்புவது : ஸ்வீட்ஸ்
முதல் காதல் அனுபவம் : நான் மிஸ் சென்னை பட்டம் பெற்ற போது, யாரோ ஒரு நபர் காதல் லெட்டர் கொடுத்தது அனுபவம்.
சந்திக்க விரும்பும் நபர் : ஒபாமாவை சந்திக்க விரும்புகிறேன்.
போக விரும்பிய வேலை : ஆஸ்திரேலியாவில் எம்.பி.ஏ., படித்துவிட்டு பெரிய கம்பெனியில் வேலைக்கு சேர நினைத்தேன்.
பிடித்த கலர்/உடை : பிங்க், ஜீன்ஸ் டி.சர்ட்
எதைப்பார்த்தால் பொறாமை வரும் : அழகான பாடல்களை, ஆடிப்பாடும் பிரபல ஜோடிகளை பார்த்தால்.
பயப்படும் ஒரே விஷயம் : ஒழுக்கமும் பயம் இல்லாத அசுரின் வாலி நான்.
வெளிப்படையாக பேசி, பத்திரிகைகளிடம் மாட்டிக்கொண்ட அனுபவம் : மிஸ் சென்னை பட்டம் பெற்றபோது, ஒரு இன்டர்வியூவில் புகை சேர்த்துக்கொள்ளும், சினிமாவில் நடிக்க மாட்டேன் என்று பேசி மாட்டிக் கொண்டது.
அடிக்கடி ஞாபகத்துக்கு வரும் விஷயம் : சர்ச் பார்க்கில் கல்லூரிகளுக்கு நான் படித்த பிளஸ்-2 வரை நான் படித்த சர்ச் பார்க் ஸ்கூல் நாட்களை மறக்கவே முடியாது. [illegible] கண்ணீர் விட்டு அழுதேன்.

எந்த விஷயத்தில் அதிக ஆசை : பைக்கில் ரொம்ப பிடிக்கும்.
வீட்டில் அதிகம் சேர்த்து வைத்திருப்பது : செருப்பு, பொம்மைகள், பர்ஃப்யூம்கள், நிறைய கார்ட்டூன் வச்சிருக்கேன்.
நன்றி சொல்ல விரும்புவது : எந்த சினிமா பின்னணியும் இல்லாத, என்னை சினிமாவில் நடிக்க அனுமதித்த அப்பா, அம்மா.
சுட்டி பொண்ணாக இருந்த போது நினைக்கிற விஷயம் : தையல் வேலை. ஸ்கூலில் ப்ராஜெக்ட் இருக்கும். அப்போ தையல் கத்துக் கொடுப்பாங்க. கத்துகிட்டு நிறைய முறை [illegible] ப்ராஜெக்டா தைச்சிருக்கேன்.
உணர்ச்சிவசப்பட்டால் : அழுதிடுவேன். 8-9 வருஷம் நான் வளர்த்த நாய் இறந்து ரெண்டு மாசங்கள் ஆகியும், அதிலிருந்து வெளியில வர முடியல.
கிடைச்ச பாப்புலாரிட்டியை வைத்து உருப்படியா செய்ய நினைப்பது : இப்போ ஆம், சென்னை இன்னர் வீல் அமைப்பு இல்லங்கள் போயிட்டு வருவேன். கவிதைகளில் இல்லாம் நிறைய உதவி செய்ய இருக்கேன்.
உங்க பலம் : தன்னம்பிக்கை
உங்க பலவீனம் : பிடிவாதம் அதனால் அதிகம் பிரச்னை வரும்.
ரொம்ப அலர்ஜி : எதுவுமே இல்லை
பிடிவாதம் : முன்னாடி எல்லாம் அம்மாகிட்ட எதுக்கு எடுத்தாலும் பிடிவாதம் பிடிப்பேன். ஆனா, இப்ப அந்த மாதிரி எதுவும் இல்லை. கொஞ்சம் மெச்சூர்டா இருக்கேன்.
மறக்க முடியாத நாள், வருடம் : மிஸ் சென்னை - 1999, சாமி படம் ரிலீஸ் - மே 2003, தெலுங்கில் வருஷம் படம் ரிலீஸ் - 2004.

# நடிப்பு என் முழு நேரத் தொழில் கிடையாது!

## - விஜய் ஆண்டனி

அதிரடி ஹிட்டு, பெண் பெண்ணு ஹிட் நிகழ்த்தப் பெயர் பெற்ற விஜய் ஆண்டனியின் அடுத்த அவதாரம், கதாநாயகன்! படத்தின் பெயர் 'நான்'. 'கொஞ்சம் பேசலாமா சார்?' என்று கண்ணைக்காட்டி தட்டினால், 'எப்போ பேசலாம் நண்பா.' என்று உடனே பேசத் தொடங்குகிறார்.

**என்ன திடீர்னு ஹீரோ ஆகிட்டீங்க?**

இசையமைப்பாளராக இந்த இடத்துக்கு வர்றதுக்காக நிறைய உழைச்சிருக்கேன், நிறைய இழந்திருக்கேன். பாடம், நல்ல பிரபல்யமும் பார்த்து வந்ததுதான் என் பயணம். இந்த இடத்தை ரசிக்கிறேன், ஆனந்திக்கிறேன். இப்போ ஹீரோவாகறதும் அப்படி ஒரு முயற்சிதான். ஷங்கர் விஜய் ரோலு, ரோமியோவா இயக்குநராகவும் திரும்பிப் பார்க்க வைச்ச ஜீவா சாரின் அசிஸ்டெண்ட் ஜீவா சங்கர்தான் டைரக்ட் பண்றார்.

இந்த கதையை அவர் என்கிட்ட சொன்னப்போ 'இந்த கதை எல்லோருக்கும் கிடைக்காது. எந்தக் காரணத்தைக் கொண்டும் மிஸ் பண்ணக் கூடாது'ன்னு மனசு சொல்லுச்சு. மியூசிக், மியூசிக்னு ஓடிட்டிருக்க எனக்கும் ஒரு ரிலாக்ஸ் தேவைப்பட்டது. இப்போ முதல்கட்டப் படப்பிடிப்பு முடிஞ்சு அடுத்த கட்டத்துக்கு போயிருக்கு படம். மியூசிக்கும் நானே போட்டிருக்கேன். திருப்தியா இருக்குன்னு எல்லோரும் சொல்லிருக்காங்க. நான் நல்ல உழைப்பாளியா என்று பார்த்துட்டு இருக்கறவங்க சொல்றாங்க.

**படத்தைப் பத்தி இவ்வளவு சிலாகிச்சுப் பேசுறீங்க, அப்படி என்ன இருக்குது இந்தக் கதையில்?**

வாழ்க்கைதான். வாழ்க்கையில் எல்லாமும் இருந்தா ஒருத்தன் வேற என்ன பெரிசா தேடப் போறான்? யாருக்கும் அந்தப் பெற்றோர் செல்வம் அமைஞ்சிடாது ஆனா கிடைக்கலேன்னா, வறுமையே மிஞ்சினா கிடைக்காததுக்கு எல்லோருக்கும் ஒரு பிரச்சினை ஆரம்பிக்குது. அதனாலே அப்படி மாறணும்னு என்கிற ஆசையில, பதற்றத்தில எல்லாத் தப்புகளையும் செய்ய ஆரம்பிப்பான். அப்படி, வாழ்க்கைக்குள்ள சிக்கி கெட்டவனாகிற ஒருவன்தான் 'நான்'. என்னை ஒரு மியூசிக் டைரக்டரா நினைச்சு பார்த்தவங்க எல்லாம் படத்தில் நான் அந்தக் கேரக்டராவேதான் தெரிவேன். பஞ்ச் டயலாக் பேச மாட்டேன், டூயட் பாடி ஆட மாட்டேன். என் பயணத்துக்கான அடுத்த ஸ்டெப்தான் இது.


**அப்ப தொடர்ந்து ஹீரோவா எதிர்பார்க்கலாமா?**

'நான்' எனக்காகவே அமைஞ்ச கதை. அதனால நடிக்க ஆரம்பிச்சேன். ஆனா, 'எனக்கு ஒரு கதை இருக்கு கேட்கறீங்களா சார்'னு இப்பவும் யாராவது போன் பண்றாங்க. 'நடிப்பு என் முழு நேரத் தொழில் கிடையாது'ன்னு சொல்லிட்டிருக்கேன். நிஜமும் அதுதான். எனக்கு மியூசிக்தான் எல்லாமே. நடிப்பு தொடருமான்னு எனக்கே தெரியலை. 'நான்' மாதிரி நல்ல கதை கிடைச்சா எனக்கு பிடிச்சிருந்தா பார்க்கலாம்.

**இப்ப இருக்கிற இசையமைப்பாளர்கள்ல உங்க இடம் எது?**

நல்ல இசையை தந்துகிட்டே இருக்கணும். அதுதான் என்னோட கனவு. வேற எதுவும் நினைச்சுக் கவலைப்படல. இந்த இடத்துக்கு வர கஷ்டப்பட்ட உழைப்பு தெரியும். நாலு ஹிட் கொடுத்த பிறகும் என்னைப் பத்தி எனக்கு தான் தெரியும். என் இசையின் வீச்சும் எனக்கு நல்லாத் தெரியும்.

இசையில் நிச்சயம் எனக்கு இன்னும் ஒரு உயர்ந்த இடம் கிடைக்கும்னு உழைச்சிக்கிட்டு இருக்கேன். அதுக்கான பாதையையும், பயணத்தையும் நிச்சயமாக வகுத்துக்கிட்டே வர்றேன். 'வேலாயுதம்' பாட்டெல்லாம் கேட்டுப் பாருங்க, உங்களுக்கே தெரியும்.



**மற்ற இசையமைப்பாளர்களின் இசையைக் கவனிக்கிறீர்களா?**

நான் எப்போதும் ரசிக்கும் ஒரே இசையமைப்பாளர் இளையராஜா. அது தனித்துவமான இசை. அந்த இசையை யாராலும் இசையமைக்க முடியாது. இசையில் எல்லாமும் அவர்தான். சமீபத்தில் ஜி.வி.பிரகாஷின் 'பூக்கள் பூக்கும் தருணம்...' பிடித்தது. யாருடைய பாதிப்பும் வந்துவிடக் கூடாது என்பதற்காக வேற இசையை நான் கேட்கிறதே இல்லை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரூ.10 கோடி செலவில் தங்க கிறிஸ்துமஸ் மரம்!

உலகின் பல்வேறு நகரங்களில் வண்ணமிகு அழகிய கிறிஸ்துமஸ் மரங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் 2.4 மீட்டர் உயரத்திலான தங்க கிறிஸ்துமஸ் மரம் அமைக்கப்பட்டுள்ளது. டிஸ்னி நிறுவனத்தின் பொம்மைக் கதாபாத்திரங்களை வில் 15 தங்க நகை நிறுவனங்கள் 4 1/2 மாதங்கள் இரவு - பகலாக சேர்ந்து வடிவமைத்துள்ளன. சுமார் 12 கிலோ தங்கத்தினால் வடிவமைக்கப்பட்ட இந்த மரத்தின் மதிப்பு ரூ.10 கோடி (இந்திய ரூபாய்) ஆகும்.







# சர்க்கரைக் கட்டிகளால் உருவாக்கப்பட்ட நாய்

பிலிப்பீன்ஸ் கலைஞரால் சிறிய சர்க்கரைக் கட்டிகளைக் கொண்டு உருவாக்கப்பட்டது தான் இந்த ஓவியம். இதைக் தயாரிப்பதற்கு 221,184 சிறிய சர்க்கரைக் கட்டிகள் தேவைப்பட்டது. ஆரம்பத்தில் இதனைக் காணும் பொழுது நாயின் சொந்தக்காரரால் அதனை ரசித்து வரையப்படுவது போல் தோன்றும். நன்கு உற்று நோக்கும் போது தான் தெரியும் இந்த ஓவியம். சிறிய புள்ளிகளால் ஓவியங்களைத் தயாரிக்கும் நுட்பத்தினைப் பயன்படுத்தி இந்த ஓவியர் இப்படத்தினை உருவாக்கியுள்ளார்.

# கைதிகளை கண்காணிக்கும் ரோபோ

கைதிகளைக் கண்காணிக்க விஞ்ஞானிகள் உதவியுடன் ரோபோ ஒன்றை தென் கொரியாவின் பொஹாங் சிறை நிர்வாகம் உருவாக்கியுள்ளது. அதிநவீன கேமராக்கள், சென்சார்கள் மற்றும் 4 சக்கரங்களுடன் இது உருவாக்கப்பட்டுள்ளது. கைதிகளின் வழக்கமான நடவடிக்கைகள் சாப்ட்வேர் உதவியுடன் இதில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதை மீறி, எந்த செயலிலாவது கைதிகள் ஈடுபட்டால் ரோபோ உடனே அலாரம் அடிக்கும். இதன் மூலம் கைதிகள் தப்பிப்பது, தற்கொலை முயற்சி, கலாட்டா ஆகியவை குறையும் என்கின்றனர் அதிகாரிகள்.





# ஜேர்மனியில் நகர்ந்து சென்ற தேவாலயம்!




ஜேர்மனியிலுள்ள Heuersdorf என்ற இடத்தில் 13ஆம் நூற்றாண்டில் Emmous தேவாலயம் ஒன்று இருந்தது. இந்த தேவாலயம் அமைந்துள்ள இடத்தில் பழுப்பு நிலக்கரி காணப்பட்டதால் தேவாலயத்தின் இருப்பிடத்தை மாற்றவேண்டி வந்தது. தேவாலயத்தை அங்கிருந்து மாற்றி, நகரும் தேவாலயமாக மாற்றி மின்சாரம், தொலைபேசி, வாகனப் போக்குவரத்து போன்றவற்றிற்கு 3 மில்லியன் யூரோ செலவாகியுள்ளது. இந்த தேவாலயம் 12 கிலோமீற்றர் (7.5 மைல்) நகர்வதற்கு 6 நாட்கள் தேவையானது.



# உப்பினால் கட்டப்பட்ட ஹோட்டல்கள்

உணவில் உப்பிருக்கலாம்..., ஹோட்டலே உப்பாக இருந்தால்...? Boliviaவில் இவ்வாறான ஹோட்டல்கள் அமைந்துள்ளன. இவற்றின் சுவர்கள், கூரைகள், மேசை, கதிரைகள் அனைத்தும் உப்புக்கட்டிகளால் உருவாக்கப்பட்டவை. 1993 காலப்பகுதியில் Hotel de Sal Playa எனும் ஒரு ஹோட்டல் முதன்முறையாக கட்டப்பட்டது. அங்கு குவியத் தொடங்கிய சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையை பார்த்து விட்டு இப்போது இந்த வளாகம் முழுவதும் இப்படியான ஹோட்டல்கள் முளைத்து விட்டன. அங்கு தங்கும் வசதி கூட வழங்கப்படுகிறதாம். பாலைவனம் போல நிலப்பரப்புக்களாக இருக்க இந்த பிரதேசத்துக்கு உயிர்கொடுத்தன்னது உப்பு. ஆனால் வியப்பு என்னவென்றால், தென் அமெரிக்க நாடான பொலிவியாவை சுற்றி அனைத்து எல்லைகளும் நிலத்தால் சூழப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# படுவான்கரை பஸ்டிப்போ

■ மட்டக்களப்பிலிருந்து - சக்தி

இன்றைய நவீன உலகில் எல்லாமே வேகமான கதியில் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஏற்றாற் போல் மக்களின் தேவைகளும் நிறைவேற்றப்பட வேண்டும். இல்லையேல் தேவைகளை நிறைவேற்றும் உந்து சக்திகளாகவேனும் பணிபுரிய வேண்டும். அவ்வாறெனில்தான் நாமும் பிரதேசமும், நாடும் முன்னேற்றம் அடையும். இது அனைவராலும் எதிர்பார்க்கப்படுகின்ற ஏற்றுக்கொள்ளப்படுகின்ற ஒன்றாகும்.

இன்று மட்டக்களப்பு மாவட்டம் படிப்படியான அபிவிருத்தியை நோக்கி நகர்ந்து வருகின்றது. இருந்த போதிலும் இன்று வரை இம் மாவட்ட மக்களின் பல குறைபாடுகள் கண்டு கொள்ளாதபடி இருக்கின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தின் அன்று யுத்த சூழலுக்குள் சிக்கியிருந்த பிரதேசமே படுவான்கரை ஆகும். அவற்றுள் போரதீவுப்பற்று பிரதேசம், பட்டிப்பளைப் பிரதேசம், வவுணதீவுப் பிரதேசம், என்பன பிரதான பங்கு வகிக்கின்றன. இப்பரந்து பட்ட பிரதேசங்களில் உள்ள மக்கள் இன்றுவரை மட்டக்களப்பு, காத்தான்குடி, களுவாஞ்சிகுடி, கல்முனை, போன்ற நகர்ப்புறங்களை நோக்கியே தமது தேவைகளுக்காக நாடிச்செல்கின்றனர். இலங்கைப் போக்குவரத்து சபை மற்றும் தனியார் பேருந்துகளிலும் பயணிக்கின்றனர். இம்மக்களை ஏற்றுவதற்காக பெரும்பாலும் நகர்ப்புறங்களிலிருந்தே பஸ்வண்டிகள் வந்து செல்லுகின்றன. இவையனைத்தையும் கருத்தில் கொண்டு படுவான்கரையை மையப்படுத்தி இலங்கைப் போக்குவரத்துச் சபை டிப்போ திறக்க வேண்டும் என படுவான்கரை வாழ் மக்கள் ஏகோபித்த கோரிக்கையை அப்போதிருந்த அரசியல்வாதிகளிடமும் அதிகாரிகளிடமும் விடுத்திருந்தனர். அந்த வேண்டுகோளுக்கிணங்க கடந்த 2004 2005 காலப்பகுதியில் பட்டிப்பளை, வவுணதீவு, வெல்லாவெளி ஆகிய பிரதேசங்களை மையப்படுத்தி பட்டிப்பளை பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள மணல்பிட்டி எனும் இடத்தில் ஓர் பஸ்டிப்போ திறப்பதற்கு அப்போது கடமையில் இருந்த கிழக்கு மாகாண இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் இராமநாதன் அங்கீகாரம் வழங்கினார்.

அதன்பின் இலங்கை போக்குவரத்து சபை மணல்பிட்டி டிப்போவுக்கு என 6 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டு சுற்று வேலியும் போடப்பட்டன. பின்னர் அப்போது மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக இருந்த ஞா. கிருஷ்ணபிள்ளை (வெள்ளிமலை) அவர்களின் நிதி ஒதுக்கீட்டினால் அந்த டிப்போவிற்கான நிர்வாக கட்டிடம் ஒன்றும் அமைக்கப்பட்டது. ஆனால் இந்த டிப்போ இதுவரை திறக்கப்படவில்லை. இதுவரை அங்கு அமைக்கப்பட்ட நிர்வாகக் கட்டிடத்தினையும் அதனைச்சுற்றி அமைக்கப்பட்டுள்ள வேலியினையும் பற்றைகள்புதர்கள் நிறைந்த நிலப்பரப்பினையுமே காணக் கூடியதாகவுள்ளது.

இது இவ்வாறிருக்க, இப்பிரதேசத்திற்கு ஓர் பஸ்டிப்போ தேவை என்பதை வலியுறுத்தி சில புத்திஜீவிகளும் கல்விமான்களும் கடந்த பொதுத் தேர்தலில் ஆளும்கட்சி சார்பில் போட்டியிட்ட சோ.கணேசமூர்த்தியிடம் அணுகியிருந்தனர். கணேசமூர்த்தி அவர்கள் உடனடியாக சம்பந்தப்பட்ட தரப்பினருடன் தொடர்பு கொண்டு இதனை நிவர்த்தி செய்வதாக உறுதியளித்தார்.

ஆனால் மணல்பிட்டியில் டிப்போ திறப்பதற்கு முன் தற்காலிகமாக கொக்கட்டிச்சோலை பொதுச் சந்தையருகில் பேருந்துகளை நிறுத்துவதற்கும், அருகில் உள்ள சமநல கேந்திரநிலையத்தின் ஒரு பகுதியில் டிப்போவிற்குரிய காரியாலயம் இயங்குவதற்கும் உடன் ஏற்பாடுகள் செய்து தருவதாகவும் அவர் கூறினார்.

ஆனால் இன்றுவரை படுவான்கரைக்கு நிரந்தர டிப்போவோ தற்காலிக டிப்போவோ அமையப் பெறவில்லை என அப்பகுதி மக்கள் ஆதங்கப்படுகின்றனர். இது தேர்தல் காலத்தில் மக்களை ஏமாற்றும் வித்தையா? என்ற கேள்வி எழுவதாக அப்பகுதி மக்கள் கேட்கின்றனர்.

மட்டக்களப்பு நகர்ப்புறங்களில் இருந்து ஏதோ சில வேளைகளில் மட்டும் தான் படுவான்கரையை நோக்கி பஸ்வண்டிகள் புறப்படுகின்றன. நேரம் பார்த்து காத்திருந்துதான் பஸ் பிடிக்க வேண்டும். இப்படிப்பட்ட கஷ்டங்களில் இருந்து விடுபடுவதற்காகவே தினமும் போக்குவரத்து சேவையை ஈடுபடுத்த இப்பகுதிக்கு ஓர் தனியான பஸ்டிப்போ தேவை என்பது உணரப்பட்டது. அதற்கான ஆரம்ப கட்ட நிகழ்வுகளை மேற்கொண்டால் அது சாண் ஏற முழம் சறுக்குவது போல உள்ளது.




படுவான்கரைப் பிரதேச மக்கள் பெரும்பாலானோர் விவசாயிகள். அவர்கள் தங்கள் போக்குவரத்திற்கு பஸ்ஸையே நம்பியிருக்கின்றனர். ஆதனை உரிய முறையில் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது பொறுப்புள்ளவர்களின் கடமை. கடந்த காலங்களில் இந்த விடயம் குறித்து மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் பல முறை பேசியுள்ளார்கள். ஆனால் இன்றுவரை எதுவித முன்னேற்றமும் ஏற்பட வில்லை.

கடந்த கால யுத்தத்தம் காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்கள் அதன் வடுக்களில் இருந்து மீளவில்லை. அவர்கள் மெல்ல மெல்ல அதிலிருந்து விடுபட வேண்டுமானால் அவர்களின் அபிவிருத்திக்கான அத்திவாரத்தினை இட்டுக் கொடுக்க வேண்டியது அவசியமாகும். ஆளும் கட்சியின் உறுப்பினராகவுள்ள முன்னாள் பிரதி அமைச்சருமான ஒருவரின் கருத்தை கிழக்கு மாகாண போக்குவரத்துச்சபைத்தலைவர் நிறைவேற்றாதது ஏன் என்று இப்பகுதி மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

எலிக்கு வேதனை பூனைக்கு விளையாட்டு என்பது போலவேதான் இருக்கின்றது பட்டு படுவான்கரை மக்களின் போக்குவரத்து நிலைமையும் தனியான பஸ்டிப்போ அமைக்கும் விடயமும். படுவான்கரை மக்கள் கடந்த காலங்களில் யுத்தம், வரட்சி, வெள்ளம் போன்ற இயற்கை அனர்த்தங்களாலும், போரினாலும் பலவேறு பாதிப்புகளுக்கு முகம் கொடுத்து வந்த மக்கள் தற்போது அவற்றிலிருந்து மீண்டு வந்து கொண்டிருக்கின்றனர். போக்குவரத்து என்பது மிகவும் பிரதானமான ஒன்றாகும். இதனை உரியவர்கள் ஒழுங்கு செய்து தரவேண்டும். அதற்காக வேண்டி எமது பகுதிக்குரிய பஸ்டிப்போவை மணல்பிட்டியில் திறப்பதற்கு நாம் பல பிரயத்தனம் மேற்கொண்டோம் ஆனால் இன்றுவரை அது எம் மக்கள் மக்களுக்கு எட்டாக் கனியாகவே உள்ளது என்கிறார் இப்பகுதியிலுள்ள சமூக ஆர்வலர் ஒருவர். இப்பிரதேச மக்கள் போக்குவரத்தில் படும் இன்னல்கள் பற்றி நன்கு அறிந்த அமைச் சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் கிழக்கு மாகாணசபையும் இன்னும் மௌனமாக இருப்பதைவிட்டு கவனமெடுக்க வேண்டியுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

மணல்பிட்டியில் பஸ்டிப்போ அமைய வேண்டியதன் அவசியத்தை தமிழ்தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் பா. அரியேந்திரனிடம் குறிப்பிட்டபோது எமது படுவான்கரைப்பிரதேசம் கடந்த காலங்களில் யுத்தத்தில் மூழ்கியிருந்தது. அப்போது எமது மட்டு மாவட்ட படுவான்கரை மக்கள் போக்குவரத்துக்கு இன்னலுற்றனர். தற்போதும் பல கஷ்டங்களை எதிர் நோக்குகின்றனர். அதற்காக வேண்டி படுவான்கரையில் மணல்பிட்டியில் ஓர் பஸ்டிப்போ அமைய வேண்டும் என எடுத்த முயற்சி தற்போது இடை நடுவே கைவிடப்பட்ட நிலையில் உள்ளது. எனவே, இந்த விடயத்தினை விரைவில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமும் அமைச்சிடமும் விளக்கி இடை நடுவில் கைவிடப்பட்ட நிலையில் காணப்படும் பஸ் டிப்போவை மீண்டும் இயங்கச்செய்ய நடவடிக்கை எடுப்போம் எனக் கூறினார்.


எது எப்படியோ இனிமேலும் தாமதிக்காமல் பஸ்டிப்போவைத் திறந்து இப்பகுதி மக்களின் போக்குவரத்து குறித்து சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பா.ம.க இரண்டாக உடைகிறது!

- சுரேந்திரஜித் -




[illegible]

## திருநெல்வேலியில் வைகோவுக்கு வெற்றி



[illegible]

**கொள்கை இன்றி கட்சி நடத்தத் தலைப்பட்ட ராமராசுக்கு நேரெதிரானவரான வைகோவுக்கு அரசியலில் நல்ல காலம் பிறந்துள்ளது. அவரது சொந்த ஊரான சங்கரன்கோவில் தொகுதி அ.தி.மு.க. எம்.எல்.ஏ காலமானதால் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு நடக்கும் இடைத்தேர்தலில் ம.தி.மு.க களமிறங்கும் என்பது தெளிவாகி விட்டது. நடந்து முடிந்த சட்டசபைத் தேர்தலில் அ.தி.மு.கவால் எடுத்தெறியப்பட்ட வைகோ மானஸ்தராக தேர்தலில் போட்டியிடாது ஒதுங்கியதன் மூலம் பணத்துக்காக அரசியல் செய்பவன் தானல்ல என்பதை நிரூபித்தார்.**



[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியே வந்தும் விரக்தியின் சிறைக்குள்..

■ கே.கே.எஸ்.நீக்கேசன்

அது வன்னிப் போர்அரங்கின் இறுதிக்கால கட்டம். தனி அரசுக்கோரிக்கையை கொள்கையாக வகுத்து ஆயுதமேந்திப் போராடிக்கொண்டிருந்த விடுதலைப்புலிகள் அமைப்பை இலங்கை அரசு, இந்தியாவினதும் மேற்குலக நாடுகளினதும் உதவி மற்றும் ஆலோசனைகளுடனும் தோற்கடித்த 2009ம் ஆண்டின் ஏப்ரல், மே ஆகிய மாதங்களில், பெருந்தொகையான விடுதலைப்புலி உறுப்பினர்கள் படையினரிடம் சரணடைந்தார்கள். 2009.05.18 அன்று முள்ளிவாய்க்காலில் விடுதலைப்புலிகளை முற்றாகத் தோற்கடித்து வன்னிப்போர் முற்றுப்பெற்றபின்னர் தம்மிடம் சரணடைந்த விடுதலைப்புலி உறுப்பினர்களின் எண்ணிக்கை பதினொராயிரத்து அறுநூறு (11600) என சிறிலங்கா அரசு அறிவித்தது. இதில் பெண்புலி உறுப்பினர்களும் அடங்குவர். இவர்கள் அனைவரும் புனர்வாழ்வு என்ற பெயரில் வவுனியாவில் பல்வேறு இடங்களில் தடுத்து வைக்கப்பட்டார்கள். தம்மிடம் சரணடைந்த முன்னாள் போராளிகள் அனைவருக்கும் துறைசார் தொழிற்பயிற்சிகள் வழங்கப்பட்டு கட்டம் கட்டமாக விடுவிக்கப்படுவார்கள் என அப்போது இலங்கை அரசு அறிவித்தது.

2010-ஜனவரி-26ல் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு தமிழ் மக்களின் வாக்குகளைப்



பெறும் பொருட்டும், அந்த மக்களுக்கு நல்லெண்ண சமிக்ஞையை வெளிப்படுத்தும் முகமாகவும் விடுதலைப்புலிகள் அமைப்பில் குறைந்த காலப்பகுதியில் செயற்பட்டவர்கள் என்ற அடிப்படையில் வவுனியாவில் அமைக்கப்பட்ட அனைத்து புனர்வாழ்வு முகாம்களிலும் தெரிந்தெடுக்கப்பட்ட எழுநூற்றிப் பதின்மூன்று (713) முன்னாள் போராளிகள் 2010-ஜனவரி 15ம் திகதி சமூகத்தோடு இணைக்கப்பட்டார்கள்.

இதன் பின்னர் 2010 -ஏப்ரல் -08 ம் திகதி நடைபெற்ற பொதுத்தேர்தலை முன்னிட்டு அங்கவீனமடைந்த ஆயிரத்து ஐநூறு முன்னாள் போராளிகள் விடுவிக்கப்படுவார்களென ஜனாதிபதி தேர்தல் பரப்புரைக் கூட்டங்களில் உறுதிமொழி வழங்கியிருந்தார். அவ்வாறே ஒவ்வொரு புனர்வாழ்வு முகாம்களிலிருந்தும் அங்கவீனப்பட்டவர்களின் விபரங்கள் திரட்டப்பட்டு அவர்கள் விடுதலை செய்யப்படுவதற்காக வவுனியா தொழில்நுட்பக்கல்லூரிக்கு அழைத்துச்செல்லப்பட்டார்கள். இவ்வாறு அழைத்துச்செல்லப்பட்டவர்களில் ஆயிரத்து முந்நூறு பேரளவிலேயே 2010-ஏப்ரல் -05ம் திகதியன்று சமூகத்துடன் இணைக்கப்பட்டார்களென ஊடகங்கள் தெரிவித்தன. மீதி இருநூறு பேரும் விடுதலைப்புலிகள் அமைப்பில் தீவிரமாகச் செயற்பட்டவர்கள் என்று முத்திரை குத்தப்பட்டு அடையாளப்படுத்தப்பட்டு அவர்களது விடுதலை இரத்துச் செய்யப்பட்டது.

இவ்வாறு ஏனைய முகாம்களிலும் விடுதலைப்புலிகள் அமைப்பில் தீவிரமாகச் செயற்பட்டார்கள் என்ற அடிப்படையில் குறிப்பிட்ட ஒரு தொகையினர் அடையாளப்படுத்தப்பட்டார்கள். இவ்வாறு அடையாளப்படுத்தப்பட்டவர்கள் அனைவரும் 2010 ஜூன் மாத இறுதிப்பகுதியில் ஓமந்தை மத்திய கல்லூரியில் ஒன்றுசேர்க்கப்பட்டார்கள். இவ்வாறு ஒன்று சேர்க்கப்பட்டவர்களின் எண்ணிக்கை ஆயிரத்து இருநூறு ஆகும். இந்த ஆயிரத்து இருநூறு பேர் கொண்ட ஓமந்தை மத்திய கல்லூரி முகாமை சிறிலங்கா புலனாய்வுப்பிரிவின் பயங்கரவாதத் தடுப்புப்பிரிவினர் கண்காணித்து வந்தனர். இக்காலப்பகுதியில் சரணடைந்த முன்னாள் போராளிகள் தொடர்பாக முன்னாள் புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரும் தற்போதைய சிரேஷ்ட அமைச்சர்களில் ஒருவருமாகிய டீ.யூ.குணசேகர பி.பி.சி வானொலிக்கு செவ்வி ஒன்றை வழங்கியிருந்தார். இச்செவ்வியிலே தமது பொறுப்பிலுள்ள முன்னாள் போராளிகள்

அனைவருக்கும் தொழிற்பயிற்சிகள் வழங்கப்பட்டு அவர்கள் சமூகத்துடன் இணைக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றார்கள் என்று கூறியதுடன் ஓமந்தையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஆயிரத்து இருநூறு பேர் தொடர்பாக தான் எந்தவித கருத்தும் கூறமுடியாது என்றும், அது தனது அதிகாரத்திற்கு அப்பாற்பட்ட விடயம் எனவும் கூறிக் கைவிரித்துவிட்டார். இதன்பின்னர் சில மாதங்களில் இவர்கள் பூசா தடுப்பு முகாமிற்கு இடமாற்றம் செய்யப்பட்டு 2011-ஏப்ரல் மாதம் முகாமாக இருந்த ஓமந்தை மத்திய கல்லூரி கல்விச்செயற்பாடுகளுக்காகக் கல்வி அமைச்சிடம் கையளிக்கப்பட்டது.

2010 ஒகஸ்ட் மாதம் தொடக்கம் ஒவ்வொரு மாதமும் ஐம்பது வயதிற்கு மேற்பட்டவர்கள், அங்கவீனப்பட்டவர்கள், திருமணம் முடித்தவர்கள் என்ற அடிப்படையில் குறிப்பிட்ட தொகையினர் விடுவிக்கப்பட்டுக் கொண்டேயிருந்தார்கள். 2011-செப்ரெம்பர் மாதம் புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் சிரேஷ்ட ஆலோசகர் சிவலிங்கம் சதீஸ்குமார் வசந்தம் வானொலியிற்கு தெரிவித்த கருத்தின்படி வவுனியாவில் தற்போது மூன்று புனர்வாழ்வு முகாம்களே உள்ளன என்றும், தம்மிடம் எஞ்சியுள்ள ஆயிரத்து எண்ணூறு முன்னாள் போராளிகளுமே இந்த மூன்று முகாம்களில் புனர்வாழ்வளிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள் என்றும் இவர்களும்

ஒக்டோபர் மாதத்திற்குள் சமூகத்துடன் இணைக்கப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் மேலும் தமது பொறுப்பிலுள்ள நீதிமன்றங்களின் வழக்குகளை எதிர்கொண்ட எழுநூறு முன்னாள் போராளிகளும் நீதிமன்றங்களால் தீர்ப்பளிக்கப்பட்டு புனர்வாழ்வுக் காலம் நிறைவடைந்த பின்னரே சமூகத்துடன் ஒன்றிணைக்கப்படுவார்கள் என்றும் கருத்துத் தெரிவித்தார்.

சதீஸ்குமார் தெரிவித்த கருத்தின்படி 2011-ஒக்டோபர்-03ம் திகதியும், 05 ம் திகதியுமாக ஆயிரத்து நாநூறு பேர் சமூகத்துடன் இணைக்கப்பட்டார்கள். பின்னர் ஒக்டோபர்-25 ம் திகதியன்று நாநூறுபேர் சமூகத்துடன் இணைக்கப்பட்டார்கள். மேலும் இவரால் குறிப்பிடப்பட்ட வழக்குகளை எதிர்கொண்ட எழுநூறு பேரைப்பொறுத்த வரையில், இவர்கள் பூசா தடுப்பு முகாமிலிருந்து நீதிமன்றத்திற்கு

முற்படுத்தப்பட்டு நீதிமன்றத்தினால் ஒரு வருடம் அல்லது அதற்கு கூடிய காலப்பகுதியை அவர்களுக்கு புனர்வாழ்வுக்காலம் வரையறுக்கப்பட்டு மட்டக்களப்பு மாவட்டத்தின் வெலிக்கந்தைப் பகுதியிலுள்ள புனர்வாழ்வு நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டனர். ஓமந்தையிலிருந்து பூசாவிற்கு கொண்டு செல்லப்பட்ட ஆயிரத்து இருநூறு பேரிலும் ஒரு தொகுதியினர் நீதிமன்றத்திற்கு உட்படுத்தப்பட்டு வெலிக்கந்தைப்பகுதிக்கு புனர்வாழ்விற்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்கள். மேலும் அவரது கூற்றின்படி இவர்களில் எழுநூறுபேர் புனர்வாழ்வு பெற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்று எடுத்துக்கொண்டாலும் மீதி ஐநூறு பேரும் விசாரணைகள் துரிதப்படுத்தப்படாமலும் நீதிமன்றத்திற்கு முற்படுத்தப்படாமலும் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றார்கள் என்பது தெளிவாகின்றது. வன்னிப்போரின் இறுதிக்கட்டத்தில் படையினரிடம் சரணடைந்தபோது தம்மிடம் சரணடைந்த அனைத்து விடுதலைப்புலி உறுப்பினர்களுக்கும் அரசு பொதுமன்னிப்பு வழங்கியுள்ளது என்றும், ஆறு மாதகாலப் புனர்வாழ்வின் பின்னர் அனைவரும் அவர்களின் குடும்பங்களுடன் ஒன்றிணைக்கப்படுவார்கள் என்றும் கூறியே இவர்கள் புனர்வாழ்வு முகாம்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். ஆறுமாதகாலம் பின்னர், ஒரு வருடமாக

நீடிக்கப்பட்டு, பின்னர் இரண்டு வருடத்தை தாண்டியது. இந்நிலையிலேயே இவ்விடயம் தொடர்பில் ஐ.நா.சபை மனித உரிமை ஆணைக்குழுவும் மேற்குலக நாடுகள் சிலவும் இலங்கை அரசிற்கு தொடர்ச்சியாகக் கொடுத்து வந்த அழுத்தத்தின் நிமித்தமாக புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு மாதந்தோறும் சமூகத்தோடு ஒன்றிணைக்கப்படும் முன்னாள் போராளிகளது தொகையினை அதிகரித்ததுடன் இச்செயற்திட்டத்தையும் துரிதப்படுத்தியது.

இச்செயற்பாடு துரிதமாகச் செயற்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் வேளையிலும் 2011-யூலை மாதத்தின் இறுதிப்பகுதியில் வவுனியாவில் அமைந்திருந்த மூன்று புனர்வாழ்வு முகாம்களிலும் சமூக ஒன்றிணைப்புக்கென தேர்வு செய்யப்பட்டவர்கள் உட்பட ஐம்பது பேர் வரையில் விடுதலைப்புலிகள் அமைப்பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தளபதி நிலையில் உள்ளவர்கள் என அடையாளப்படுத்தப்பட்டு பூசா தடுப்பு முகாமிற்கு கொண்டு செல்லப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றார்கள். தளபதி என்றால் என்ன? சாதாரண போராளி என்றால் என்ன? எல்லோரும் ஆயுதங்களின்றி நிராயுதபாணிகளாக உடுத்த உடையுடன் சரணடைந்தவர்கள்தானே. இவர்களை இன்னமும் இலங்கை அரசு பாகுபடுத்திப் பார்ப்பது யதார்த்தத்திற்குப் பொருத்தமற்றது. இறுதியாக பூசா தடுப்பு முகாமிற்குக் கொண்டு செல்லப்பட்ட ஐம்பது பேரும் உண்மையில் தளபதி நிலையில் உள்ளவர்கள் அல்ல. அவர்கள் அனைவரும் சாதாரண போராளிகளே. எனவே இறுதிக்கட்டமாக பூசா தடுப்புமுகாமிலும் ஏனைய சிறைச்சாலைகளிலுமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் போராளிகளை காலம் தாழ்த்தாது நீதிமன்றங்களுக்கு உட்படுத்தி அவர்களுக்கான குறுகிய கால புனர்வாழ்வளித்து சமூகத்துடன் ஒன்றிணைப்பதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்வது அரசின் கடமையாகும்.

இவ்விடயங்கள் ஒரு புறமிருக்க 2011-ஒக்டோபர் மாத இறுதிவரையிலும் முகாமிலிருந்து நாநூறு முன்னாள் போராளிகள் புனர்வாழ்வின் பின்னர் சமூகத்துடன் ஒன்றிணைக்கப்பட்டுள்ளார்கள். இவர்கள் அனைவருக்கும் சுயதொழில் ஊக்குவிப்புக்கான கடன் திட்டங்கள் (இரண்டரை லட்சம் ரூபா) மற்றும் அரச திணைக்களங்களில் வேலைவாய்ப்புகள் என்பன பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன என்று புனர்வாழ்வு, சிறைச்சாலைகள் அமைச்சர் சந்திரசிறி கஜதீர மற்றும் இலங்கை அரசின் உயர் அதிகாரிகள் போன்றோர் உள்நாட்டு வெளிநாட்டு ஊடகங்களுக்குத் தெரிவித்துக் கொண்டிருக்கின்றனர். இது எந்த




அளவு உண்மைத்தன்மையைக் கொண்டுள்ளது என்பதைப்பார்ப்போமாயின். இலங்கை வங்கியினால் மேற்கொள்ளப்படுகின்ற கடன் திட்டமாக ஒருவர் ஆகக்கூடிய கடன் திட்டமான தலா நான்கு லட்சம் ரூபா கடன் பெற்றுக்கொள்வதற்குரிய படிவம் பூர்த்தி செய்யப்பட்டு கிராம அலுவலர், பிரதேச செயலர் ஆகியோர்களால் உறுதிப்படுத்தப்பட்டு பிரதேச செயலக பணிமனைகள் ஊடாக இலங்கை வங்கிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இலங்கை வங்கியிலிருந்து கடன் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பம் உங்களுக்கு அனுப்பி வைப்பார்கள் என்று பிரதேச செயலகத்தினரால் கூறப்பட்டது. ஆனால் இன்றுவரை எந்த விதமான விண்ணப்பமும் எவரிடமிருந்தும் வந்து சேரவில்லை. தொடக்கத்தில் கடன் திட்டத்திற்கு விண்ணப்பித்தவர்களில் யாழ். குடாநாட்டிலும் வன்னியிலும் கிழக்கு மாகாணத்திலுமாக அடையாளத்திற்காக ஒரு குறிப்பிட்ட தொகையினருக்கு இலங்கை வங்கியினால் கடன் வழங்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்திலும் வன்னியிலுமாக அடையாளத்திற்காக மிக்குறுகிய தொகையினரான முன்னாள் போராளிகளுக்கு அரச திணைக்களங்களில் வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. ஒட்டுமொத்தத்தில் ஆயிரத்திற்கும் குறைவானவர்களே மேற்குறிப்பிட்ட இரண்டு உதவிகளையும் பெற்றுள்ளனர். மிகுதி ஒன்பதினாயிரத்திற்கு மேற்பட்டோரது வாழ்க்கை நிலையும் மிகவும் இக்கட்டான சூழ்நிலையிலேயே உள்ளது.

புனர்வாழ்வு பெற்று சமூகத்தோடு ஒன்றிணைக்கப்படும் முன்னாள் போராளிகள் அனைவரும் IOM நிறுவனத்தினரால் பதிவிற்கு உட்படுத்தப்பட்டு அந்நிறுவனத்தால் அடையாள அட்டை வழங்கப்பட்டே சமூகத்துடன் ஒன்றிணைக்கப்படுகிறார்கள். இவர்கள் சமூகத்துடன் ஒன்றிணைக்கப்பட்ட பின்னர் IOM நிறுவனத்தினரால் கட்டம் கட்டமாக இவர்களின் சுயதொழில் முயற்சிக்கான தொழில் உபகரணங்கள் வழங்கப்படுகின்றன. தொடக்கத்தில் இதன் பெறுமதி எண்பது ஆயிரமாகக் குறைக்கப்பட்டு பின்னர் அத்தொகை மேலும் குறைக்கப்பட்டு தற்போது அறுபத்தையாயிரம் ரூபா பெறுமதியான சுயதொழில் உபகரணங்கள் வழங்குதலே நடைமுறையில் உள்ளது. இத்தோடு புனர்வாழ்வு பெற்று மீள்குடியேறியவர்களுக்கென உலக உணவுத்திட்ட நிவாரணத்திலிருந்து மூன்று மாதங்களுக்கான நிவாரணப்பொருட்கள் வழங்கப்படுகின்றன. இதுவும் கட்டம் கட்டமாகவே இடம் பெறுகின்றன.

இந்நிலையில் புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கு அரசாங்கம் எவ்விதமான ஆக்கபூர்வமான செயற்பாடுகளையும் மேற்கொள்ளவில்லை. அரச அதிகாரிகளும் இவர்களின் முகாமைத்துவத்திறன், கல்வித்திறன் ஆகியவற்றை இனங்கண்டு இவர்களுக்கான வேலை வாய்ப்பை பெற்றுக் கொடுப்பதில் பாராமுகமாகவே செயற்படுவதாகத் தெரிகின்றது. தற்போது மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்தித் திட்டங்களில் வேலைவாய்ப்புக்களுக்கு முன்னாள் போராளிகளுக்கு சந்தர்ப்பங்கள் வழங்கப்படலாம்.

எனவே இனிவரும் நாட்களில் புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகளின் வாழ்வாதாரப்பிரச்சினைகளை இனங்கண்டு வெகு விரைவில் அதற்குரிய தீர்வுகளைப் பெற்றுக்கொடுப்பதன் ஊடாகவே அவர்களின் மனங்களை வெல்ல முடியும். இதனை இதயசுத்தியுடன் மேற்கொள்வதற்கு அரசாங்கமும் அரச அதிகாரிகளும் முன்வருவார்களா?

# பூமியை அச்சுறுத்தும் அஸ்டிரொயிட்கள்



கடந்த ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பு ஒரு விண்கல் -அஸ்டிரொய்ட்- பூமிக்கு நெருக்கமாக வந்து பூமியை எட்டிப் பார்த்துவிட்டுச் சென்றது. அப்போது அது பூமியிலிருந்து சுமார் 4 லட்சம் கிலோ மீட்டர் தொலைவில் இருந்தது. பூமிக்கும் இதர கோள்களுக்கும் இடையிலான தூரம் கோடிக் கணக்கான கிலோ மீற்றர் என்பதை வைத்துப் பார்த்தால் 4 லட்சம் கிலோ மீற்றர் என்பது அருகாமையில் என்று சொல்லத்தக்கதே.

இந்த விண்கல் 2004 டிசம்பரில் கண்டு பிடிக்கப்பட்ட போது இது இந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் பூமியின் மீது வந்து மோதலாம் என்று கருதப்பட்டது. ஆனால் பின்னர் இதன் சுற்றுப்பாதையை விரிவாக ஆராய்ந்த போது அவ்வித ஆபத்து ஏதும் இல்லை என்று கண்டறியப்பட்டது. பறக்கும் பாறை என்று சொல்லத்தக்க இந்த விண்கல்லின் நீளம் சுமார் 700 மீட்டர். எனினும் பூமிக்கு ஆபத்தை உண்டாக்கக் கூடிய வாய்ப்பு உள்ள விண்கல் என்ற பட்டியலில் இது சேர்க்கப்பட்டுள்ளது.

நிபுணர்கள் தயாரித்து வைத்துள்ள இப்பட்டியலில் சுமார் 783 விண்கற்கள் இடம் பெற்றுள்ளன. சிறியதும் பெரியதுமான இந்த விண்கற்கள் பூமியின் மீது மோத வாய்ப்பு உள்ளதா என்பது பற்றி விஞ்ஞானிகள் தொடர்ந்து ஆராய்ந்து வருகின்றனர். பெரிய விண்கல் ஒன்று பூமியின் மீது வந்து மோதுமேயானால் அதன் விளைவாகப் பேரழிவு ஏற்பட்டு மனித இனமே அழிந்து போக வாய்ப்புள்ளது. பல மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் இப்படியான பறக்கும் பாறை ஒன்று பூமியின் மீது வந்து மோதியிருக்கலாம் என்றும் அதன் விளைவாகவே பூமியில் அப்போது பேரெண்ணிக்கையில் இருந்த டைனோசார் விலங்குகள் கிட்டத்தட்ட பூண்டோடு அழிந்து போனதாகவும் ஒரு கருத்து உள்ளது.

புதன், வியாழன், பூமி போன்று பல கோள்கள் தனித்தனிப் பாதையில் - தனித்தனி வட்டங்களில் சூரியனைச் சுற்றி வருகின்றன. செவ்வாய் கோளுக்கும் அதை அடுத்த வட்டத்தில் உள்ள வியாழனுக்கும் நடுவே ஏதோ ஒரு கோள் இருந்திருக்க வேண்டும் என்றும் அது சுக்குநூறாக உடைந்து விட்டதாகவும் ஒரு கருத்து உள்ளது.

போடே என்ற ஜெர்மன் விஞ்ஞானி சூரியனுக்கும் பல்வேறு கோள்களுக்கும் உள்ள தூரத்தை வைத்து ஒரு குருட்டாம் போக்கு கணக்குப் போட்டு 1772 ஆம் ஆண்டில் மேற்படிக் கருத்தைக் கூறினார். பிறகு வானவியல் நிபுணர்கள் தொலை நோக்கி மூலம் வானை சல்லடை போட்டுத் தேடியபோது பல குட்டிக் கோள்கள் கண்டு பிடிக்கப்பட்டன. இவற்றில் பல சில நூறு கிலோ மீட்டர் குறுக்களவு கொண்டவை.

இவை தவிர போடே குறிப்பிட்டுக் கூறிய சுற்றுப் பாதையில் ஆட்டுமந்தை போல எண்ணற்ற குட்டிக் கோள்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இவை அனைத்துமே சூரியனைச் சுற்றி வருபவை. இவை ஆங்கிலத்தில் அஸ்டிராய்ட்ஸ் என்று குறிப்பிடப்படுகின்றன. இந்த அஸ்டிராய்டுகளில் பல, தமது சுற்றுப் பாதையிலிருந்து விலகி பூமியின் சுற்றுப் பாதையைக் கடந்து சூரியனைச் சுற்றிச் செல்கின்றன.

சில அஸ்டிராய்டுகள் பூமிக்கு அருகில் பூமியைக் கடந்து செல்கின்றன. சமீபத்திய கணக்குப்படி 3 லட்சத்துக்கும் அதிகமான அஸ்டிராய்டுகள் உள்ளன. இவை அனைத்துக்கும் பெயர்கள் உண்டு. ஆரம்ப நாட்களில் இவற்றைக் கண்டுபிடித்தவர்கள் விசித்திரமான பெயர்களை வைத்தனர். இப்போது சர்வதேச வானவியல் அமைப்பின் அங்கீகாரத்துடன் முதலில் எண்கள் அளிக்கப்படுகின்றன. பின்னர் பெயர் வைக்கப்படுகிறது. தமிழகத்தில் காவலூர் என்னுமிடத்தில் உள்ள வான் ஆராய்ச்சிக்கூடம் 1988 பெப்ரவரியில் கண்டு பிடித்த ஒரு அஸ்டிரொய்டுக்கு பிரபல கணித மேதை ராமானுஜத்தின் பெயர் வைக்கப்பட்டுள்ளது.

2000 நவம்பரில் கண்டு பிடிக்கப்பட்ட ஒரு அஸ்டிராய்ட் பெயர் வருணன். மாதம் ஒன்றுக்கு சுமார் 5000 விதம் புதிது புதிதாக அஸ்டிராய்டுகள் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன. எதிர்காலத்தில் அஸ்டிராய்ட் ஒன்றினால் பூமிக்கு ஆபத்து ஏற்படும் போலத்தோன்றினால் பூமியை எவ்விதம் காப்பாற்றுவது என்பது பற்றிப் பல திட்டங்கள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண் என்றால் பேயும் இரங்குமா?






**எம். அருணாசலம்,**
**பூண்டுலோயா.**

**கேள்வி:** எதற்கெடுத்தாலும் பிடிவாதம் பிடிக்கும் பெண்கள் குறித்து உங்கள் கருத்தென்ன பித்தரே!

**பதில்:** உமது கேள்வியைப் பார்த்தால் வாழ்க்கையில் நீர் நிறையவே அடிபட்டிருக்கக் கூடும் என்று தோன்றுகிறது. எது எப்படியென்றாலும் பெண்களின் அதீத பிடிவாதம் குடும்பத்தை நாசப்படுத்தும் என்பது பெரியோர் வாக்கு.

**ம. அன்னலட்சுமி,**
**கொடிகாமம்.**

**கேள்வி:** பித்தரே உலகில் புத்திசாலிகள் அதிகமா? முட்டாள்கள் அதிகமா?


**பதில்:** இது குறித்து நிச்சயமாகச் சொல்வதற்கில்லை. ஆனாலும் தம்மை அதிபுத்திசாலிகள் மேதாவிகள் என எண்ணிச் செயற்படும் நபர்கள் நிச்சயம் முட்டாள்கள் பட்டியலில் இடம்பெற வேண்டியவர்களே.



**தா. அங்கையற்செல்வி,**
**கிளிநொச்சி.**

**கேள்வி:** எனது நெருங்கிய சிநேகிதியொருத்தி இப்போதெல்லாம் அடிக்கடி தானாகச் சிரித்துக் கொண்டிருக்கிறாள். இதற்குக் காரணம் என்னவாக இருக்கலாம் பித்தரே?

**பதில்:** தெரியாதோ நோக்கு... தெரியாதோ? அவள் தானாகச் சிரிப்பா... தனியா நடப்பா... என்றொரு சினிமாப் பாடல் உள்ளதே. உண்மையில் உமது சிநேகிதிக்கு ஏற்பட்டிருப்பது காதல் நோய் தான்.



**அ. அகிலேஸ்வரன்,**
**கொழும்பு – 06.**

**கேள்வி:** பெண் என்றால் பேயும் இரங்கும் என்ற முன்னைய பழமொழி இக்காலத்துக்கும் பொருந்துமா பித்தரே?

**பதில்:** இரங்காது; இறங்கும்... மரத்தைவிட்டு... இறங்கி தப்பினேன் பிழைத்தேன் என்று திரும்பிப் பார்க்காமல் ஓடித்தப்பிவிடும்.



**வே. ராகவன்,**
**பரந்தன்.**

**கேள்வி:** கிணறு வெட்டப் பூதம் கிளம்பியது போல.. என்கிறார்களே? அதற்கு அர்த்தம் என்ன பித்தரே?

**பதில்:** எப்படி விளக்குவது என்று புரியவில்லை. வேண்டுமானால் நீர் ஒரு திருமணத்தைச் செய்து பாரும் சிலவேளை புரியும்.

**ம. வேலாயுதபிள்ளை,**
**மட்டக்களப்பு.**

**கேள்வி:** பிறப்பு, இறப்பு இவற்றின் அடிப்படை என்ன பித்தரே?

**பதில்:** உணர்ச்சிகளின் இணைவால் ஏற்படுவது பிறப்பு. உணர்ச்சிகளின் இழப்பால் ஏற்படுவது இறப்பு.

**அ. அற்புதன்,**
**திருகோணமலை.**

**கேள்வி:** நாம் இருவர் நமக்கு இருவர் என்ற கோட்பாடு மாறிவருகிறதா?


**பதில்:** நாம் இருவர் நமக்கு ஒருவர் போதுமே என்ற நிலைப்பாடு ஏற்பட்டு வருவதாகத் தோன்றுகிறது. போகிற போக்கில் நாம் இருவர் நமக்கேன் ஒருவர் என்று சிந்திக்கும் நிலை வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.



**ம. வேல்நம்பி,**
**மன்னார்.**

**கேள்வி:** பிரச்சனையே இல்லாத வாழ்க்கை எவருக்காவது அமைவதுண்டா?

**பதில்:** பெரும்பாலும் பிரச்சனையே இல்லாத வாழ்க்கை அமைவதில்லை என்பது யதார்த்தம். ஆனால் சிலருக்கு வாழ்க்கையே பிரச்சனையாக ஆகிவிடுவது பரிதாபத்துக்கு உரிய தொன்று.



**ப.ம. அன்புச் செல்வன்,**
**வத்தளை.**

**கேள்வி:** குரங்கு இனத்தின் பரிணாம வளர்ச்சியே மனிதன் என்பதற்கு ஏதாவது ஆதாரம் உண்டா பித்தரே?

**பதில்:** மனிதர்களின் பற்பல சேஷ்டைகளைப் பார்த்தும் அதனை உம்மால் நம்பமுடியவில்லையா?

## சொற்சிலம்பம் - போட்டி இல: 498

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | 4 | | ■ | 5 |
| | ■ | 6 | | | ■ | 7 | |
| 8 | 9 | | | ■ | 10 | | |
| 11 | | | ■ | 12 | | | ■ |
| ■ | | ■ | 13 | | | ■ | 14 |
| 15 | | 16 | | ■ | 17 | 18 | |
| 19 | | | ■ | 20 | ■ | 21 | |
| | ■ | 22 | | | | | |

அனுப்புபவர் பெயர்:..............................................
விலாசம்:..............................................
..............................................
கையொப்பம்:..............................................

### மேலிருந்து கீழ்

01. ஒரு பிரபந்தம்
02. பெரும் பறை வகை
03. நேரத்துடன் தொடர்புடையது
04. தீங்கான நோக்கிலான செயற்பாடு
05. தமிழ்நாட்டில் பிரசித்தமான ஒரு நகரம்
07. விருந்தினர்
09. தேவையற்று தாமதப்படல்
10. இனிப்பானது
12. சிஷ்யருக்குப் பெரியவர்
13. உணவு
14. கதையில் நாயகின் எதிரி இவன்
15. எல்லைச் சுவர்
16. ஓர் அரிசி ரகம்
18. அனைத்து
20. உடனிருப்பவன்

### இடமிருந்து வலம்

01. அடாவடித்தனம்
06. ஒரு பெண்பாற் பெயர்
07. சுட்டும் சொல், ஆறாவது வேற்றுமை உருபு.
08. செம்பு உலோகம்
10. நாற்காலி
11. நாள்
12. இரத்தம்
13. முடிவு வரும்
15. பக்கத்துக்குச் சேவை செய்தால் இவருக்கு சேவை செய்த மாதிரி
17. தானிய அளவீட்டு அலகு
19. திடீரென
21. ஒன்றுடன் மற்றொன்றைச் சேர்
22. பாதுகாப்புத் தருகின்றவன்

## சொற்சிலம்பம் போட்டி இல. 498

சொற்சிலம்பம் 498 போட்டிக்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2011 ஆண்டு டிசம்பர் 18ஆம் திகதி ஆகும். விடைகளும், வெற்றி பெற்றவர்களின் பெயர்களும் டிசம்பர் 25 ஆம் திகதிய சுடர்ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.

முதலாவது பரிசாக ரூபா 250 உம் இரண்டாவது பரிசாக ரூபா 150 உம் மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். சரி விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

*அனுப்பவேண்டிய முகவரி:*
**சுடர் ஒளி யாழ். அலுவலகம்,**
**561, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

### போட்டி இல. 495 இல் பரிசு பெற்றோர்

**1 ஆம் பரிசு** — பா. வசந்தன், இல. 64/22, கொட்டாஞ்சேனை வீதி, கொழும்பு-13.

**2 ஆம் பரிசு** — செல்வி. சு. சிந்துயா, செனிங்கோ ஆயுள் காப்புறுதி. அலுவலகம். மானிப்பாய்.

**3 ஆம் பரிசு** — ஸிதாக் கலீல், இல 456/4, ஹிஜ்ராமாவத்தை, நிந்தாவூர்.

## சொற்சிலம்பம் போட்டி இல.493 விடைகள்

**மேலிருந்து கீழ்**

01.முதுகு, 02.கருநாய், 03. துகில், 04.திரு, 06.விரைவு, 09.மிகவும், 11.பகைவர், 13.தம், 15.சவால், 16.அமுதம், 18.சதகம், 21.கண், 22.பலம், 24.யது

**இடமிருந்து வலம்**

01.முகஸ்துதி, 05.சாளி, 07.துரு, 08.க்ருமி, 10.கும்பல், 12.கதவு, 14.புகை, 15.சவும், 17.வசனம், 20.முகர்தல், 22.பண், 23.தன், 24. யவடு, 25.சம்பதும்

### பாராட்டுப் பெறுவோர்

(1) **தாமோதரம் வரவேல்,**
இல.5, ஏறாவூர், செங்கலடி.

(2) **க.கமால்தீன்,**
புன்னக்குடாவீதி, ஏறாவூர் -3.

(3) **K.F.சுபானி,**
இல.14, புளியடி குறுக்கு வீதி.
ஏறாவூர்- 06.

(4) **T.கந்தையா,**
மே/பா.கே.செல்வதுரை,
இல.11-5/1 சென் லோறன்ஸ் வீதி,
வெள்ளவத்தை.

(5) **ரா.துஷாராகாந்தி,**
குருவிக் கொல்ல, மடுல்சீமை.

(6) **பா.நடராஜா,**
இல-03,செட்டியார் தெரு,
கொழும்பு -11.

(7) **பத்மா குணநாதன்,**
நவாலி தெற்கு,
மானிப்பாய்.

(8) **திருமதி. எஸ். ரெஜிவோல்ட்,**
இல.262,பதுளை வீதி,
பண்டாரவளை.

(9) **எஸ். ஜெயச்சந்திரராசா,**
இராசேந்திரங்குளம்,
வவுனியா.

(10) **ஏ.ஜே.ரெக்ஸி,**
இல-20,ஹேனமுல்லை,
கொச்சிக்கடை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் சுடர்



## என்ன செய்யும் சின்ன மைனா? 3




## கூழுக்குப் பாடிய புலவர்

புலவர் பொன்முடியும், புலவர் நீலவண்ணனும் தங்கள் வறுமையைப் போக்க ஜமீந்தாரைப் பாடி பரிசுப் பெறவந்து கொண்டிருந்தனர். வெயில் கொடுமை அதிகமாக இருக்கவே இருவரும் உழவன் ஒருவன் குடிசையைக் கண்டு அங்கே சென்று வெளித்திண்ணையில் அமர்ந்தனர். உள்ளே இருந்த கந்தன் இருவரையும் கண்டு வெளியே வந்தான். "அய்யா தாங்கள் யார்? தண்ணீர் வேண்டுமா?" என்று கேட்டான். இருவரும் "வேண்டும்" என்றதும் கொண்டு வந்து கொடுத்து விசாரித்தான். இருவரும் ஜமீந்தாரைப் பாடி பரிசு பெற வந்ததைச் சொன்னார்கள். "ஊர் நிலங்களையும், சொத்தையும் ஏமாற்றிப் பிழைக்கும் மோசக்காரனை புகழ்ந்து பாடுவதா? பொய் பேசுவதில் வல்லவன். கஞ்ச பிரபு" என்று கந்தன் எரிமலையாக வெடித்தான்.

"என்ன சொல்கிறீர்கள்?" என்று பொன்முடி கேட்டார்.

"எங்கள் நூறுவேலி நிலத்தையும் அபகரித்து எங்களை வறுமையில் வாட விட்டவர். குபேரனாக இருந்த எங்களை கூலியாளாக மாற்றியவரே அவர்தான்" என்று விம்மினார். பொன்முடியார் ஜமீந்தாரைப் பாடி பரிசுப் பெறாமல் வீடு திரும்பலாம் என்று நீலவண்ணனிடம் சொன்னார்.

"நமக்கு ஜமீந்தார் எப்படிப்பட்டவர் என்பது தேவையற்றது. அவரைப் புகழ்ந்து பாடப் போகிறோம். பரிசுப் பெறப்போகிறோம் என்றார்.

"நான் வரவில்லை. நீங்கள் போங்கள். உங்களைப் போல நாய் விற்ற காசு குரைக்காது என்று சமாதானம் செய்து கொள்ள முடியாது" என்றார், பொன்முடியார். நீலவண்ணன் ஜமீந்தாரைப் புகழ்ந்து பாட புறப்பட்டார்.

"புலவர் பெருமானே! வறுமையிலும் உங்கள் செம்மையை என்னால் உணர முடிகிறது. பரிசுக்காகத் தகுதி இல்லாதவரைப் புகழ்ந்து பாடுவது புலவர்க்கு இழுக்கு என்று போகாமல் இருப்பதை நினைக்கும் போது பெருமையாக இருக்கிறது. என் தந்தையார் வசதியாக இருந்தபோது புலவர்களுக்கு வாரிக் கொடுப்பார். உங்கள் பசி போக்க என்னிடம் இருப்பது கூழ்தான். வாருங்கள் குடிக்கலாம்" என்றான் கந்தன்.

"இருக்கும் கூழையும் பகிர்ந்தளிக்க சொன்னபோதே அது தேவாமிர்தமாகி விட்டது. உங்கள் குடும்பத்தைக் கூழுக்குப் புகழ்ந்து பாடுகிறேன்" என்று கவிபாடினார், பொன்முடியார்


'கூழுக்காகப் பாடுவதா?"

'கம்பரே கூழுக்காகப் பாடியதாகக் கூறுவார்கள். 'உண்டிக் கொடுத்தோர் உயிர்க் கொடுத்தோர்'


இல்லையா?"

கந்தன் தந்தக் கூழைப் புலவர் மகிழ்வோடு குடித்தார்.

அ) இரண்டு படத்திற்கும் இடையே உள்ள ஐந்து வித்தியாசங்களை வட்டமிட்டுக் காட்டுங்கள்



ஆ) சிறுமிக்கு படத்திலுள்ள லொலி பொப்களை பெரியது முதல் சிறியதுவரை வரிசைப்படுத்திக் கொடுத்து உதவுங்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







கடலில் அதிவேகமாக நீந்தி
சிறிய மீன்களை வேட்டையாடும்
மீன்தான் இது.



苦 练



படத்தைப் பாரக்கும் போது யாரோ சிறுவனைச் சித்திர வதை செய்கிறார்கள் என்று நினைக்கின்றீர்களா. அப்படியில்லை. சீனாவிலுள்ள ஒரு ஜிம்னாஸ்ரிக் பயிற்சி நிலையத்தில் இச்சிறுவனுக்கு பயிற்சி வழங்கப்படுகின்றது. ஜிம்னாஸ்ரிக் பயிற்சி என்றால் எவ்வளவு கடினமானது என்பதை இப்படங்களைப்பார்க்கும் போது தெரிகிறதல்லவா?








பண்டிகைக்கால
விசேட சலுகை

உங்கள் குருதியில் சக்கரையின் அளவை
கணித்துக்கொள்ள ப்ரொடிஜி ஒட்டோகோட்
மற்றும் ப்ரொடிஜி பொக்கட்

இலங்கையில் கோர்ட் முறை இல்லாமல் ஒரு துளி இரத்தத்தில் உங்கள் சக்கரையின் அளவை கணிக்கும்

Approved by the US FDA

இந்த விளம்பரத்தை எந்தவொரு பிரதான பாமசி, Arpico மற்றும் Laugfs சுப்பர்மார்கட்களில் வழங்கி இந்த சலுகையைப் பெற்றுக் கொள்ளலாம்.

எந்த ஒரு பழைய கருவியையும் கொடுத்து புதிய கருவியை பெற்றுக்கொள்ளலாம்



மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள்: 0777 427 827
யாழ்-அருள்தாஸ்: 0773 464 342 ■ கிழக்கு-ரஜினி: 0773 138 023

PRODIGY AutoCode
Handy Easy Fast
~~Rs. 5950/=~~
Rs. 4950/=

PRODIGY Pocket
Small Fast Convenient
~~Rs. 3950/=~~
Rs. 2950/=



கேளுங்கள்

இவ்விசேட சலுகை டிசம்பர் 31ம் திகதி வரை மட்டுமே.


Imported and Marketed by Service for Health Emar EMAR PHARMA (PVT) LTD.

இல. 23, அண்டர்சன் வீதி, கலுபோவில, தெஹிவளை.
தொலைபேசி: 2810913/4 பெக்ஸ்: 2768475 Email: customer_support@emarpharma.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




லொறி, டிபர், ட்ரக்
வாகனங்களுக்கு

# லீசிங் சுமை குறைக்கப்பட்டுள்ளது



பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்படாத
லொறி, டிபர், ட்ரக் கனரக வாகனங்களை
மிக இலகுவான முறையில் குறைந்த வட்டியில்
லீசிங் அடிப்படையில் பெற்றுக் கொள்ள
சென்ட்ரல் பினான்ஸ் நிறுவனத்திற்கு வாருங்கள்.



CF
சென்ட்ரல் பினான்ஸ் கம்பனி பிஎல்சி

உடன் தொடர்புகளுக்கு 0112315215

கொழும்பு (011) 2300555 கண்டி (081) 2227000 அல்லது அருகிலுள்ள சென்ட்ரல் பினான்ஸ் கிளை அலுவலகத்திற்கு வாருங்கள் வெப்.தளம். www.cf.lk & www.cfautomart.com

# TIEFSTE PREISE!

Möbel Ferrari

HINWIL



1550.-
statt 3250.-

ALEXA
Komplette Polstergruppe
Nur in echt Leder rot
Edler Chromfuss
2er 180x93x68
3er 220x93x68

SOLANGE VORRAT!

ECHTES LEDER

Tel. 044 931 20 40
info@moebel-ferrari.ch
moebel-ferrari.ch

Öffnungszeiten
Montag-Freitag
9.00-20.00
Samstag
9.00-18.00

0.0% Direkt Finanzierung

Möbel zum Schlafen, Essen und Wohnen. Benvenuti a Hinwil.


இப்பத்திரிகை கொழும்பு - 06 வெள்ளவத்தை, பெரக்கும்பா ... என்டர் பிறைஸ் ஸ்தாபனத்தினால் 2011, டிசம்பர் 04ஆம் திகதி வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org